

பிர்ம்ம நிஷ்டாள்

திருச்சி சுவாமிகள்

ஜீவிய சரித்திரம்

பிர்ம்ம நிஷ்டாள்

ஸ்ரீலஸ்ரீ திருச்சி சுவாமிகள் ஜீவிய சரித்திரம்

அ. சேஷாத்ரி சர்மா

கற்பகாம்பிகை பதிப்பகம்
6, நல்லதம்பி செட்டித் தெரு,
மவுண்ட் ரோடு, சென்னை-2.

52-2

உ

ஓம்:

பிர்ம்ம நிஷ்டாள்

ஸ்ரீலஸ்ரீ திருச்சி சுவாமிகள் ஜீவிய சரித்திரம்

எழுதியவர் :

அ. சேஷாத்ரி சர்மா

ஆசிரியர் : 'கர்மயோகரஹஸ்யம்', 'ஞானதீபிகை', 'சத்யாக்ரக மகிமை', 'ஞானவீரர்கள்' சரித்திரம்

கற்பகாம்பிகை பதிப்பகம்

6, நல்லதம்பி செட்டித் தெரு,

மவுண்ட் ரோடு :: சென்னை-2.

முதற் பதிப்பு: ஏப்ரல் 1964
உரிமை: ஸ்ரீ கைலாச ஆச்ரமம்,
கெஞ்சனஹள்ளி, பங்களூர்-26.

விலை: ரூபா 1-50

ஸ்ரீ கணபதி துதி!

முன்னவனே! யானை முகத்தவனே! முத்திநலம்
சொன்னவனே! தூய்மெய்ச் சுகத்தவனே!—மன்னவனே!
சிற்பரனே! ஐங்கரனே! செஞ்சடையம் சேகரனே!
தற்பரனே! நின்தாள் சரண்.

ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள்-அருட்பா.

ஸ்ரீ கந்தர் துதி!

எந்தா யுமெனக் கருள்தந் தையுநீ!
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்!
கந்தா! கதிர்வே லவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறைநா யகனே!

ஸ்ரீ அருணகிரிநாதர்-கந்தரனுபூதி.

ஸ்ரீ கரிமாணிக்கப் பெருமாள் துதி!

மாமலராள் மார்பினிலே மகிழ்ந்திலங்கக் கமல
மலர்க்கரத்தில் சக்கரமும் மணிச்சங்கும் துலங்கத்
தேமதுர மொழியிருவர் திருமருங்கில் விளங்கச்
சீரியநற் காட்சிதருஞ் சேவகனே! கோல
வாமனனே! காக்குமொரு மன்னவனே! கரிமா
மாணிக்க முகில்வண்ண வாசவனே! என்றும்
சேமமிகும் கற்குளத்தே திகழ்பவனே! உன்றன்
சேவடியைத் தொழுதுநின்றேன், சேயெனையாண் டருளே!

என். எஸ். சிதம்பரம்—"கற்குளக் கவிமலரில்".

மெட்ரோபாலிட்டன் பிரிண்டர்ஸ், சென்னை-2.

52-2

ஓம்:

ஸ்ரீலஸ்ரீ திருச்சி சுவாமிகள் அஞ்சலி!

என். எஸ். சிதம்பரம்

1. அருட்கயிலை சென்றுவந்த
அருந்திருச்சிச் சுவாமியெனும்
தெருளுருவே! திருவுருவே!
திகழ்ஞானச் சீருருவே!
குருவுருவே! வழிகாட்டிக்
கோதகற்றி விழிப்பூட்டும்
தருமமுயர் ஒளியுருவே!
தருகநின்றன் பேரருளே!

2. ஆளுகின்ற ஓம்சக்தி
அன்னையவள் கழல்போற்றி
நாளுமவள் நினைவாக
நற்பணிசெய் மாமணியே!
தோளுயர்ந்த இராமன்போல்
துலங்குமொரு புகழ்நிதியே!
தாளிரண்டும் பணிதலுற்றேன்!
தருகநின்றன் பேரருளே!

3. கதிகாட்டும் ஆசிரமம்
கஞ்சனஹள் ளியில்ஒன்று
மதிகாட்டும் படியாக
மாண்புடனே அமைத்து(உ)யிரின்
பதிகாட்டும் தவக்கனலே!
பார்புகழும் செழுங்கதிரே!
நிதிகாட்டும் அடிதொழுதேன்!
நின்பதந்தந் தாண்டருளே!

ஸ்ரீலஸ்ரீ திருச்சி ஸ்வாமிகள் திருவருட் பிரசாத வாழ்த்துப் பாமாலை

வெண்பா

(வேலவன்)

1. வானோங்கு நீள்புகழான் வையமெலாம் மெய்யறிவே
தானோங்க நோற்கும் தயாநிதியான் —மானேந்தும்
செஞ்சடையா னெப்பான் திருச்சிச் சுவாமிகளைக்
கஞ்சனஹள் ளிச்சென்று காண்!

2. காணுகின்ற காட்சியெலாம் கானல்நீர் என்றுதெளிந்
தாணவங்கன் மம்மாயை அத்தனையும்—தானொழித்து
நிர்க்குணமாய் நிற்கும் நிமலன் அவனெங்கள்
சற்குருவாம் போற்றியவன் தாள்!

3. அலைபோல் குமிழிபோல் அந்நுரையே போல
நிலையில் பிரபஞ்சம் நிற்பத்—தலைவன்நீ
தண்கடல்போல் தாங்கும் தகையுணர்ந்தார் வெம்பிறவி
வன்கடலைத் தாண்டுவரா வார்!

4. பொறிவாயி லைந்தவித்த புண்ணியனே மெய்சால்
அறிவாய் அகண்டமாய் அன்பின்—செறிவாய்
விளங்குவாய் நின்னுளத்தே மேவு கருணை
வளங்கண்டார் வாழ்வுபெறு வார்!

5. வாழி கயிலாச ஆசிரமம் நீடூழி
வாழி திருச்சிச் சுவாமிகளே!—வாழி
அகல்ஞால முள்ளளவும் அன்னான் பொருள்சேர்
புகழ்வாழி புங்கவன் வாழி!

ஓம்:

முன்னுரை

மாக்களை மக்களாக்குதற்கே மகான்கள் தோன்று கிறார்கள்; அறநெறி காட்டி ஆண்டவனை அடையச் செய்கிறார்கள். சீலமும் பக்தியும் செறிந்த அவர்களது வாழ்வு மக்களுக்கு நல்ல வழிகாட்டியாக இருக்கிறது.

அத்தகைய அரிய மகான்களின் வரிசையில் ஒருவர் பிர்ம்ம நிஷ்டாளான திருச்சிசுவாமிகள்; திருச்சியில் இருந்த காரணத்தால் திருச்சி சுவாமிகள் என்று அழைக்கப் பெறும் பேர்பெற்ற மகானுபாவராவர்; அம்பிகையின் பூரண அருளுக்குப் பாத்திரமான சுவாமிகள் பிர்ம்ம நிஷ்டாளான நேபாள தேசத்து 140 வயது நிரம்பிய ஸ்ரீலஸ்ரீ சிவபுரி மகராஜ் அவர்களிடம் உபதேசம் பெற்ற புண்ணிய சீலர். இப்போது தென்கன்னட தேசத்தில், மைசூர் ரஸ்தாவில், பங்களூருக்குப் பக்கலிலுள்ள கஞ்சன ஹள்ளி என்ற பொன் மயமான இடத்தில், ஸ்தாபனம் செய்யப் பெற்றுள்ள "ஸ்ரீ கைலாச ஆசிரம"த்தின் தலைவராக வீற்றிருந்து அருள் ஆட்சிபுரிபவர். மக்கள் நலனையே கருது பவர். அவர்களுடைய தெய்வ மணம் கமழும் திவ்ய சரித்திரத்தை எழுத ஏற்பட்ட வாய்ப்பை அடியேன் பெரும் பாக்கியமாக எண்ணுகிறேன்.

இந்நூலைச் சரிபார்த்து, அச்சில் பிழைகளையும் திருத்தி உதவியதோடு ஸ்ரீலஸ்ரீ திருச்சி சுவாமிகள் மீது அஞ்சலி பாடி அனுப்பிய எனது நண்பர் தமிழ் நாட்டில் புகழ் பெற்ற கவிஞர் திரு. என். எஸ். சிதம்பரம் அவர்களுக்கும் ஸ்ரீலஸ்ரீ திருச்சி சுவாமிகள் திருவருட்பா பிரசாத வாழ்த்துப் பாமாலை இயற்றிய எனது நண்பர் தமிழ்ப் பேரறிஞர் திரு. வேலவன் அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றி.

மேலும், கம்பர், ஔவையார், காளமேகம் முதலான புலவர் பெருமக்களின் பாடல்களுக்குச் சிறந்த முறையில் உரை எழுதியவரும், முருகன் பரிபாடல், திருமால் பரி பாடல், பட்டனூர் ஆக்கிய பகவத் கீதைச் செய்யுட்கள், திரு வாசகம் முதலிய நூல்களுக்கு விளக்கவுரை எழுதியவரும், அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை திருக்குறள் முதலிய இலக்கிய நூல்களுக்கு ஆராய்ச்சியுரை எழுதியவருமான சித்தாந்தச் செல்வர், தமிழ்க்களஞ்சியம் பெரும்புலவர் திருமிகு புலியூர்க் கேசிகன் அவர்கள் இந் நூலுக்கு அரியதோர் அணிந்துரை எழுதியுள்ளார்கள். இதனை மக்கள் நன்கு படித்துணர வேண்டும். அன்னார்க்கு நான் என்றும் பெரிதும் கடப்பாடுடையேன்.

அன்பர்கள் இந்நூலைப் படித்து அருளொளி வீசும் திருச்சி சுவாமிகளின் அனுக்கிரகத்திற்கு ஆளாக வேண்டு கிறேன்.

தி. நகர்,
சென்னை-17
13-4-64

அ. சேஷாத்ரி சர்மா



ஓம்:

ஸ்ரீராஜ ராஜேச்வர்யஷ்டகம்

அம்பா சாம்ப்பவி சந்த்ரமௌலி-ரபலாऽபர்ணா உமா பார்வதீ
காளி ஹைமவதீ சிவா த்ரிணயனீ காத்யாயனீ பைரவீ |
ஸாவித்ரீ நவயௌவனா சுபகரீ ஸாம்ராஜ்ய-லக்ஷ்மீப்ரதா
சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீராஜராஜேச்வரீ || 1 ||

அம்பா மோஹினி தேவதா த்ரிபுவனீ ஆனந்த-ஸந்தாயினீ
வாணீ-பல்லவ-பாணி-வேணு-முரளீ-கானப்ரியாலோலினீ |
கல்யாணீ உடுராஜபிம்ப-வதனா தூம்ராக்ஷ-ஸம்ஹாரிணீ
சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீராஜராஜேச்வரீ || 2 ||

அம்பா நூபுர-ரத்ன-கங்கண-தரீ கேயூர ஹாராவலீ
ஜாதீ-சம்பக-வைஜயந்தி-லஹரீ-க்ரைவேயகை-ராஜிதா |
வீணா-வேணு-விநோத-மண்டித-கராவீராஸனே ஸம்ஸ்திதா
சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீராஜராஜேச்வரீ || 3 ||

அம்பா ரௌத்ரிணி பத்ரகாளி பகலா ஜ்வாலாமுகீ வைஷ்ணவீ
ப்ரஹ்மாணீ திரிபுராந்தகீ ஸுரநுதா தேதீப்யமானோஜ்வலா |
சாமுண்டா ச்ரித-ரக்ஷ-போஷ-ஜநநீ தாக்ஷாயணீ வல்லவீ
சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீராஜராஜேச்வரீ || 4 ||

அம்பா சூல-தனு:-கசாங்குச-தரீ அர்த்தேந்து-பிம்பாதரீ
வாராஹீ மதுகைடப-ப்ரசமனீ வாணீ-ரமா-ஸேவிதா |
மல்லாத்யாஸுர-மூகதைத்ய-மதனீ மாஹேச்வரீ சாம்பிகா
சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீராஜராஜேச்வரீ || 5 ||

அம்பா ஸ்ருஷ்டி-விநாச-பாலனகரீ ஆர்யா விஸம்சோபிதா
காயத்ரீ ப்ரணவாக்ஷராம்ருதரஸ:-பூர்ணானுஸந்தீக்ருதா |
ஓங்காரீ விநதாஸுதார்ச்சிதபதா உத்தண்ட-தைத்யாபஹா
சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீராஜராஜேச்வரீ || 6 ||

அம்பா சாச்வத-ஆகமாதி-விநுதா ஆர்யா மஹாதேவதா
யா ப்ரஹ்மாதி-பிபீலிகாந்த-ஜநநீ யா வை ஜகன்மோஹினீ
யா பஞ்சப்ரணவாதி-ரேபஜனனீ யா சித்கலா மாலினீ
சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீராஜராஜேச்வரீ || 7 ||

அம்பா-பாலித-பக்தராஜ-தனிசம் அம்பாஷ்டகம் ய: படேத்
அம்பா-லோல-கடாக்ஷ-வீக்ஷ-லலிதஞ்சைச்வர்ய-மவ்யாஹதம் ||
அம்பா பாவன-மந்த்ர-ராஜ படனா-தந்தே ச மோக்ஷப்ரதா
சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீராஜராஜேச்வரீ || 8 ||

|| இதி ஸ்ரீராஜராஜேச்வர்யஷ்டகம் சம்பூர்ணம் ||

அணிந்துரை

உலகத்திலே, உயிர்க்கூட்டைத் தாங்கியவையாய்ப் பிறவியெடுக்கும் ஆன்மாக்களை, ஆன்றோர்கள் இரண்டு வகையினவாகப் பாகுபடுத்திக் கூறுவார்கள். தாந்தாம் செய்த வினைகளின் பயனாகப் பிறவிச்சேற்றில் வந்து அழுந்துபவை ஒரு வகை; ஆன்ம கோடிகளின்பால் அருள் நோக்கங் கொண்டு, அவர்களின் அறியாமையைப் போக்கி, அவர்களை நல்வழிக்கண் நிறுத்துதற் பொருட்டாகத், தாமே தம்பால் வினைத்தொடர்ச்சி இல்லாதபோதும், மனிதவுடம்பினை அருள் காரணமாகவே மேற்கொள்பவை மற்றொரு வகை. இந்த இரண்டு வகையான பிறவிகளுள், முதலதைச் சாதாரண மனிதப்பிறவி என்பார்கள்; பின்னதைத் தெய்வப்பிறவி என்பார்கள்.

இந்த வகையில், உலகத்து உயிர்களுக்கு அருள்பாலிக்க வேண்டுமென்கின்ற அருளினாலே, உடற்கூடெடுத்துத் தோன்றியிருக்கும் உயர்ந்தோராக ஸ்ரீலஸ்ரீ **திருச்சி சுவாமிகள்** விளங்குகின்றனர். தெய்வக் குறுமுனிவராகிய அகத்தியர் வீற்றிருக்கும் பொதியமலையின் அடிவாரத்தே, தமிழும் சைவமும் வளர்த்த மாதவச் **சிவஞான சுவாமிகள்** தோன்றியருளிய விக்கிரமசிங்கபுரத்தே, இந்தப் பெருமானும் வந்து தோன்றியிருக்கின்றனர். அருள் ஒழுகும் அமுத நோக்கமும், வாக்கும் கொண்டு, ஆன்மகோடிகளை எல்லாம் இருளகற்றி இறையருளில் ஒன்று படுத்தும் இணையற்ற தொண்டினை மேற்கொண்டிருக்கும் சுவாமிகளின் திருவரலாற்றை அறிந்து, நாம் அனைவருமே நற்பயன் பெறுதல் வேண்டும்.

'ஜீவன் முக்தர்கள்' என்று விளங்கும் பெரியார்கள், தம்மையும் இறையையும் இரண்டாகக் காணாமல், இறையருமையும்

ளோடு தம்மையும் ஒன்றுபடுத்தி, அனைத்தையும் இறை யருளின் வெளிப்பாடுகளாகவே கண்டு களிகின்ற தூய நிலையினர் ஆவார்கள். இந்தப் பெரியார்களைக் காணும்போதும், இவர்களைப்பற்றிக் கேட்கும்போதும், பேசும்போதும் நம் உள்ளங்களில் கவிந்திருக்கும் இருள் அகன்றுபோகத் தெய்வீக ஒளி நம்பால் தோன்றி, நம்மையும் தூயவர்களாக்கி, இறையருளில் செலுத்தி, இன்புறுத்துகின்றது. இவ்வாறு ஆன்மகோடிகளை இறையருளின்பால் ஒன்றுபடுத்தும் அருநிலையினரான சுவாமிகளின் திருவரலாற்றைப் பெரியார் **திரு. அ. சேஷாத்திரி சர்மா** அவர்கள், பக்திச்செறிவுடனும் பைந்தமிழ் நயத்துடனும் நமக்கெல்லாம் தருகின்றனர்.

திரு. சர்மா அவர்களைக் குறித்துத் தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாண சுந்தரனுர் அவர்கள், 'ஸ்ரீ சேஷாத்திரி சர்மா சிறந்த தேச பக்தர்; அரசியல் ஞானி; குணமலை; இடனில் பருவத்தும் ஒப்புரவுக்கு ஒல்காத சிறப்பினர்' என் றெல்லாம் போற்றியிருக்கின்றனர்கள். பண்டிதமணி, திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்களும், மற்றும் பல பேரறிஞர் களும் சர்மா அவர்களின் தமிழார்வத்தையும் பிற சிறப்புக் களையும் மதித்துச் சிறப்பித்திருக்கின்றனர். தேசபக்தன், சுதேசமித்திரன், தஞ்சை மித்திரன், சமரசபோதினி, நாடகாபி மானி, பெண்கல்வி ஆகிய பல பத்திரிகைகளில் உழைத்தும், 'செட்டிநாடு' இதழின் ஆசிரியராகக் கால்நூற்றுண்டுக் காலத்துக்கு மேல் பணி செய்தும், உலகிற்கு உபகாரமான அறிவுநலத்தைத் தந்துவந்த சர்மா அவர்கள், இப்பொழுது திருச்சி சுவாமிகளின் திருவரலாற்றையும் தமிழகத்தின் ஆன்ம நலத்தைப் பெருகச்செய்வதன் பொருட்டாக அளிக்கின்றனர்.

படிக்கப் படிக்கப் பரவசமூட்டும் வண்ணம், திருச்சி சுவாமிகளின் திவ்விய சரித்திரத்தை உயர் திரு. சர்மா அவர் கள் மிகவும் அற்புதமாக எழுதியுள்ளார்கள். பக்தர்கள் இதனைப் படித்துப் பயனுறுவதோடு, அன்னை ஸ்ரீ ராஜ ராஜேஸ் வரியின் திருவருளுக்குப் பாத்திரமாவார்களாக.

குறைபாடு உடையதான இந்த மனித இனம் இந்த வரலாற்றைக் கற்றும், சுவாமிகளின் தரிசனப் பேற்ருேடு தெய்வீக அருள்நலத்தைப் பெற்றும், நிறைவெய்தித் தூய்மை பெற்று உயருமாக! சுவாமிகளின் அருள்ஒளியிலே தம்மை ஈடுபடுத்தி மக்கள் அனைவருமே உயர்வாராக; உய்வாராக! சுவாமிகளின் அருளாட்சியை அனைவரும் ஏற்றுப் போற்றுவோமாக!

பொருள்நினைவும் பிறநினைவும் போயகல எந்நாளும்
அருள்நினைவே நினைவாகி அடருமிருள் தனையொழித்து
அருள் திருச்சி சுவாமிகளின் அருளடிகள் உளங்கொண்டு
மருளகற்றி வாழ்ந்திடுக மன்னுயிரின் தொகுதியெலாம்.

சென்னை
23-3-'64

புலியூர்க் கேசிகன்

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

பொருளடக்கம்

பக்கம்

பிரம்ம நிஷ்டாளின் வம்ச வரலாறு

பிர்ம்ம நிஷ்டாள் அவதாரம்

சாதுக்கள், சித்தர்கள் தரிசனம்

கொழும்புப் பிரயாணம்

நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வரவேற்பு

பக்கம்

மூன்று மஹாசித்திகள்

ஸ்ரீதிருச்சி சுவாமிகள் அவர்களின் கைலாச யாத்திரை

ஸ்ரீலஸ்ரீ திருச்சி சுவாமிகளின் திருப்பணிகளும் அறப்பணிகளும்

——::——



ஸ்ரீலஸ்ரீ திருச்சி சுவாமிகள்

ஓம்

ஸ்ரீராஜ ராஜேஸ்வரி துணை

திருச்சி சுவாமிகள் ஜீவிய சரித்திரம்

—::—

மானிடப் பிறப்பின் சிறப்பு!

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரி"தென்றார் பெரியோர். எத்தனையோ ஜென்மங்களுக்குப் பிறகு அவன் செய்த பூர்வ புண்ணிய கர்மபல விசேஷத்தால், அவனுக்கு மனிதஜென்மா கிடைக்கின்றது. மனித ஜென்மா மிகவும் சிரேஷ்டமானதென்று ஈண்டு குறிப்பிடத் தேவையில்லை. மனிதனுடைய வாழ்க்கை நோக்கம் நிறைமனிதனாக ஆவதுதான். அதாவது பரிபூரண மனிதனாக ஆகித் தன்னைப் படைத்த கடவுளை வழுத்தி, அவரை அடைதல் பொருட்டேயாம்.

பிரார்த்தனைகளும் சத் சங்கங்களும்:—

உபநிஷதங்களோ வேதங்களின் சாரம். பகவத் கீதையோ உபநிஷதங்களின் திரட்டு. உபநிஷதங்களும் புராணங்களும் மனிதன் நிறைமனிதனான வரலாறுகளை வருணித்துக் கூறுகின்றன. நிறை மனிதனாக ஆக விரும்புவோர்க்கும் வழிகளையும்

உபாயங்களையும் விவரித்து நன்கு விளக்குகின்றன. ஆகவே, மனிதன் பரிபூரணமான நிலையை அடைவதற்குச் சாதகம் செய்ய வேண்டும். இக்கலியுகத்தில் மனிதவர்க்கம் சிரமப்படாதிருக்கச் சுலபமான வழிகளைச் சான்றோர் வகுத்துள்ளார்கள். அவை, பிரார்த்தனைகளும், சத் சங்கங்களும்தான் என்பதை மேலோர் மேலும் அறிவுறுத்தியுள்ளார்கள்.

அருச்சுனன் சத் சங்கம் நாடல்:—

மகாபாரத பஞ்சபாண்டவர்களில், அருச்சுனன் என்பான் பூரண மனிதனாக ஆசைப்பட்டான். அவனது சங்கல்பம் உடனே நிறைவேறவில்லை. தெய்வ ஸகாயம் கொஞ்சம் குறைவாக விருந்ததென்று உணர்ந்தான். பரம ஆஸ்திகனாதலால், தெய்வ சகாயத்தை நாடினான். ஆபத் பாந்தவனான ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவைக் குறித்துப் பிரார்த்தித்தான். ஸத்சங்கங்களில் சேர்ந்து இடைவிடாது தியானம் செய்தான். ஸ்ரீகிருஷ்ணன் இலகுவில் மசியக் கூடியவரா? அல்லது அருச்சுனன் தான் லேசான பக்தனா? சாஸ்திரங்களில் கூறியுள்ளபடி பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று, புனித தீர்த்தங்களில் நீராடி, ஆங்காங்குக் கோயில் கொண்டு விளங்கும் புண்ணிய மூர்த்திகளை வணங்கி, ஏகாக்கிரச் சித்தனாய், மனதை ஒருமைப் படுத்தினவனாய், கடுமையான தவம் புரிந்தான்.

பகவான் பிரசன்னமானார்:—

இடைவிடாது, இராப் பகலாகத் திரிகரண சுத்தியுடன் (மனம், வாக்கு, காயம் ஒன்று பட்டிருத்தல்)

அருச்சுனன் தவம் செய்ததைப் பார்த்து, உள்ளம் மகிழ்ந்து பகவான் பிரசன்னமானார். "அருச்சுனா! உனது தவங்கண்டு உவகையுற்றேன். நரநாராயண அவதாரத்தில், குருக்ஷேத்திரப் போர்க்களத்தில், நான் தேர்த்தட்டில் அமர்ந்து, உனக்குச் சொல்லும் உபதேசம் மூலம் உன்னை நிறை மனிதனாக ஆக்கு வேன்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அருச்சுனன் நிறை மனிதனாக ஆனான்:—

பகவான் தேர்த்தட்டில் அமர்ந்து, யுத்த களத்தில் அருச்சுனனுக்கு என்ன உபதேசம் செய்தனரோ அதுவேதான் "ஸ்ரீமத் பகவத் கீதை" என்பதாகும். அந்த உபதேச மூலம் அருச்சுனன் நிறை மனிதனாக ஆனான். அருச்சுனனும் மனிதன் தான். அவனுக்கும் விருப்பு வெறுப்புக்களுண்டு. கோபதாபங்களுமுண்டு. ஆனால், அவன் முறை பிறழாது, திரிகரண சுத்தி யாக வாழ்க்கையை நடத்தி, தனக்குரிய நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்து, பகவானிடம் பக்தி செலுத்தி, மன உறுதியுடன் நின்று வாழ்க்கையில் வீர புருஷனாக விளங்கினான். அர்ச்சுனன் என்பானும் மனிதனாகப் பிறந்தான். திரிகரண சுத்தி விரதத்தைக் கொண்டான். நிறை மனிதனாகவும் ஆனான் என்பதை மகாபாரதம் தெளிவுறுத்துகின்றது.

ஸ்ரீபகவத் கீதை வாழ்க்கைக்கு வழிகாட்டி நூல்:—

ஸ்ரீ கிருஷ்ணபகவான், ஸ்ரீமத் பகவத்கீதையை அருச்சுனனுக்கு மட்டும் உபதேசம் செய்யவில்லை. அருச்சுனனை முன்னிட்டுக் கொண்டு, அவனையே உதாரண புருஷனாக வைத்து, ஒவ்வொரு மனிதனையும்

கூப்பிட்டு, அவனவனுக்குச் சொன்ன உபதேசம் என்று அறிதல் வேண்டும். ஸ்ரீமத் பகவத்கீதை என்பது மக்களுக்கு உயரிய வாழ்க்கைக்கு வழிகாட்டி நூலாகும். அருச்சுனன் மாதிரி மனித ஜென்மா எடுத்த ஒவ்வொரு மனிதனும் திரிகரண சுத்தி விரதத்தைக் கைக்கொண்டு, நிறை மனிதனாக ஆகலாமென்பதை மக்கள் அறிதல் வேண்டும்.

——

மகரிஷிகள் வாக்கும் தக்க சான்றுகும்:—

ஆரம்பத்தில், ஒவ்வொரு மனிதனும் நிறை மனிதனாக ஆக ஆசைப்படல் வேண்டும். அதற்கான முயற்சிகளைச் செய்யவேண்டும். மனித வாழ்க்கைக்குரிய நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்து, சன்மார்க்க நெறியில் நின்று, நல்லோர்களைத் தேடி, சத்சங்கம் கொள்ளவேண்டும். கலியுகத்தில் சத்சங்கம் கூடுவதும், அதன் மூலம் கர்மா, பக்தி, ஞானம் ஆக இந்த மூன்று துறைகளில் படிப்படியாக ஈடுபடுவதும் சிறந்த வழிகளாகும்.

மனிதனுக்குத் திரிகரண சுத்தி வேண்டும்:—

மனிதனுக்கு எவ்வாறு திரிகரண சுத்தி ஏற்படுமென்பது கேள்வி? முதலாவதாக, மனித ஜென்மா எடுத்தவன் வயது வந்ததும், இல்லற தர்மத்திலிருக்கும் போதே, அவ்வப்போது புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் செல்லவேண்டும். இரண்டாவதாக, அங்குக் கோயில் கொண்டு விளங்கும் புண்ணிய மூர்த்திகளை நினைவில் கொண்டு, இறைவன் துதிகளை

மனமுருகி, வாய் விட்டுச் சொல்ல வேண்டும். அவ்வவ்விடங்களில், தனிமையில் அமர்ந்து, தியான ரூபமாகப் பிரார்த்தனைகளைச் செய்தல் வேண்டும். மூன்றாவதாக, புண்ணிய நதிகளிலோ, தீர்த்தங் களிலோ முறைப்படி நீராடி, மூர்த்திகளைத் தரிசித்து நியம நிஷ்டையுடன் ஆடிப் பாடித் திரிகரண சுத்தியுடன் வழிபடல் வேண்டும். இவ்வாறான வழிகளில் மனிதன் அநுஷ்டித்து வந்தால், அவனுக்கு ஸத்குரு கடாக்ஷம் ஏற்பட்டு, அவன் நிறை மனிதனாக ஆவான் என்பது மகரிஷிகள் வாக்கு.

தாயுமான அடிகளார் வாக்கு!

ஈண்டு, "மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாத் தொடங்கினர்க்கோர், வார்த்தைசொலச் சத்குருவும் வாய்க்கும் பராபரமே" என்று தாயுமான அடிகளார் கூறியிருப்பது மக்கள் சிந்தனைக்குரியது.

ஸ்ரீ அன்னையின் பிரதிக்ஞை!

ஸ்ரீ கைலாசத்திலே, ஸ்ரீ கைலயங்கிரியின் பள்ளத்தாக்குகளிலே, ஸ்ரீ சுத்த தர்ம மண்டல வெட்ட வெளியிலே, பிரதி வருஷம் வைகாசி பௌர்ணமியிலே, அன்னை ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பிர்ம்மாதி தேவர்களுடன் கொலுவீற்றிருக்கிறாள். வசிஷ்டர், வாமதேவர், நாரதாதி ரிஷிகளும் சூழ்ந்திருக்க, ஜெகன்மாதா ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி, பூலோகத்துக்கு அதிபதியாக நியமிக்கப் பெற்றுள்ள மைத்திரேய ரிஷியைப் பார்த்து, மகரிஷியே! பூலோகத்தில்

எல்லாம் சரிவர நடக்கின்றனவா? என்று வினவு கிருர்.

மகரிஷி ஸ்ரீமைத்திரேயர்:—

"எல்லா உலகங்களையும் ஈன்று பரிவுடன் ரட்சிக்கும் தாயே! சர்வ சக்தியும் சர்வக்ஞையுமான தங்களுக்குத் தெரியாத விஷயமில்லை. பூவுலகில் பாபங்களே மலிந்து நிற்கின்றன. பாபம் செய்கிற வர்களும் மனம் துணிந்தே பாபகாரியங்களைச் செய்து, அதிலேயே திளைத்துக் களிப்புறுகின்ருர்கள். புண்ணியம் செய்கிறவர்களோ எண்ணிக்கையில் மிகவும் குறைவு. புண்ணிய கர்மாக்கள் செய்ய ஆசைப்படுகிறவர்களும் மிகச்சொற்பமாகவே இருந்து வருகின்ருர்கள். சன்மார்க்கத்தில் ஈடுபடுவோர்க்குக் கடும் சோதனைகள் அதிகமாக ஏற்படுகின்றன. அதனுல் அவர்கள் மனமொடிந்து நிற்கின்ருர்கள். சுருக்கமாகச் சொல்லுமிடத்து, எல்லாக் கஷ்டங்களும் துன்பங்களும், இல்லாக் கொடுமையும் நல்லவர் களுக்குத்தான் ஏற்பட்டு வருகின்றன. இது குறித்து மக்கள் ஒரே குரலால் "இது நல்லவர்களுக்குக் கால மல்ல" என்று ஏங்கி, வருந்தி வாடி நிற்கின்ருர்கள். "இந்த மாதிரியான நிலையானது எனது மனத்துக்கும் சங்கடமாக இருந்து வருகின்றது" என்ருர் மைத்திரேயர்.

அன்னை ஸ்ரீராஜ ராஜேஸ்வரி:—

பூமிக்குச் சமமான பொறுமையுடைய மகரிஷி மைத்திரேயரே! "சிறிதும் கவலைப்பட வேண்டாம். இது கலியுகமல்லவா? அக்கிரமங்கள், அநீதிகள்,

துன்மார்க்க பாபங்கள் செய்வோர் அனைவரும் கடுந்தண்டனைக்குள்ளாவார்க ளென்பது தாங்கள் அறியாததல்ல. துஷ்டநிக்ரஹம் சிஷ்டபரிபாலனம் நடைபெறும். தவிர, பாபிஷ்டர்கள் கீழான ஜென் மங்களுக்கு இரக்கமின்றித் தள்ளப்படுவார்கள். நல் லோர்கள் என்றும் நலம் பெறுவார்கள். முன் ஜென் மங்களில் அவரவர்கள் செய்த பாப புண்ணிய காரியங் களுக்குத் தக்கபடி, நல்லோர்கள் பூவுலகில் சிற்சில சோதனைகளுக்குட்பட்டாலும், அவர்கள் இறுதியில் நலம்பெற்று, இகத்திலும் பரத்திலும் நன்மைகளையே அடைவார்கள். இது திண்ணம். கலியுகத்தில் பாபி களுக்கும் துஷ்டர்களுக்கும் பிரத்தியட்ச தண்டனைகளும் தொடர்ந்தாற்போல் கஷ்டங்களும் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கு மென்பதும் தங்களுக்குத் தெரிந்தது தானே" என்ருர் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி.

மகரிஷி மைத்திரேயர்:—

சர்வக்ஞையே! கருணைக்கடலே! நல்லோர்கள் சத்காரியங்களில் ஈடுபடும் போதும், அவர்கள் புண்ணிய கர்மாக்களைச் செய்ய ஆரம்பிக்கும் போதும் அவர்களுக்குத் தேவியாகிய தங்களின் அனுக்கிரக மும், அருளும் உற்சாகமும் வழங்கப்படல் வேண்டும். இதனுல் புண்ணிய காரியங்கள் செய்ய முன்வரு வோர்கள் உற்சாகத்துடன் நல்ல காரியங்களையே செய்து, நல முறுவார்கள் அல்லவா? என்ருர் மைத்திரேயர்.

ஸ்ரீ அன்னை உறுதிகூறல்:—

மகரிஷி மைத்திரேயரே! இக்கலியுகத்தில் சத்சங் கங்களில் கூடி, உத்தமர்களைத் தரிசித்துப் புண்ணிய

காரியங்களைச் செய்யும் நல்லோர்கள் இகத்திலும் பரத்திலும் நலமடைவார்கள். புண்ணிய காரியங்களைச் செய்ய விரும்பும் நல்லோர்களுக்கு ஆதரவாக, ஆங்காங்கு ஆச்சாரிய புருஷர்களும், தீர்க்க தரிசிகளும், மகாபுருஷர்களும், பிரம்ம நிஷ்டர்களும், நல்லுபதேசங்கள் செய்து வருவார்கள். யோகிகளும், மகான்களும் நாட்டில் அங்கங்கே ஸஞ்சரிப்பார்கள். புனித ஆசிரமங்களைத் தேடிவரும் பக்தர்களுக்கு ஆச்சாரியர்களும், சாதுக்களும், பிர்ம்மநிஷ்டர்களும் அனுக்கிரகம் செய்வார்கள். இக்கலியுகத்தில் நமது பாரத தேசத்தில் புண்ணியவான்களின் ஆஸ்திகப் பிரசாரம் இனி வலுத்து நிற்கப்போகின்றது. நாஸ்திகர்கள் இவர்களைத் தரிசித்த மாத்திரத்தில் ஆச்சரியகரமான முறையில் ஆஸ்திகர்களாக மாறி விடுவார்கள். ஆசிரமங்களில் சத்குருவாய், பிர்ம்ம நிஷ்டர்களாய் விளங்கும் மகனீயர்கள் பக்தர்களை ஆசீர்வதித்து அவர்களை நல்வழிப்படுத்துவார்கள்" என்று அனுக்கிரகம் செய்தருளினார் ஸ்ரீ அன்னை.

மகரிஷி மைத்திரேயர்:—

தாயே! ஸகல ஜீவராசிகளுக்கும் இருப்பிடமே! "உனது கருணை இருந்தால் மட்டுமே நல்லோர்கள் சத்சங்கத்தின் மூலம் உய்வார்கள். இஃதொருவழியினால்தான் நாஸ்திகர்களும் ஆஸ்திகர்களாக ஆவார்கள். மக்கள் திரிகரண சுத்தர்களாய் வாழ்க்கை லட்சியத்தை அடையவும் முயற்சிப்பார்கள். இறுதியில் நிறை மனிதராக ஆகவும் உனது அருளை எதிர்பார்த்து நிற்பார்கள்" என்று கூறி ஸ்ரீ அன்னையிடம் ஸ்ரீ மைத்திரேயர் விடை பெற்றுக் கொண்டு, பாரத

தேசத்தின் மத்திய ஸ்தானமாகிய விந்திய மலைப் பள்ளத்தாக்கிலுள்ள தமது பரத ஆசிரமத்திற் கேகினு ரென்பது ஓர் ஐதிகம். இந்த ஐதிகப்படியே, ஸ்ரீராஜ ராஜேஸ்வரியின் ஆக்ஞைப்படி இவ்வுலகம் நடைபெறுகிற தென்பதும் சத்புருஷர்களின் திட நம்பிக்கை. ஸ்ரீ அம்பிகையின் ஆக்ஞைப்படியே நாட்டில் ஸத்புருஷர்கள் அவ்வப்போது அவதாரம் செய்து வருவதும் பிரத்தியட்சம்.

தேவரகசியங்கள்:—

உலகில் எதிர்பாராது நடைபெறும் சம்பவங் களெல்லாம் தெய்வீக ஸம்பவங்களேயாகும். தேவ ரகசியங்கள் நிறைந்திருக்கும். ஸ்ரீ அன்னையின் இச்சா மாத்திரத்தில் அனைத்தும் நிகழ்கின்றன வாதலால், பக்தர்கள் ஸ்ரீ தேவியிடம் சரணமடைந்து அவ்வன்னை யின் பிரசாதத்திற்குக் காத்து நிற்க வேண்டும். ஸ்ரீ ஜெகதம்பிகையின் ஆக்ஞைப்படி, அவரது பாத தூளியைத் திரட்டி,பிர்ம்மா பதினான்கு லோகங்களையும் சிருஷ்டித்தனர். மகாவிஷ்ணு இவைகளை ரட்சித்து வருகின்றார். கடைசியாக, ருத்ரன் 'திரியம்பக' மந்தி ரத்தைச் சொல்லி, விபூதி தாரணம் செய்து அகமகிழ்ந்து, தனது ஸம்ஹாரத் தொழிலைச் செய்து வருகின்றார். ஸ்ரீ அம்பிகையின் அருமை பெருமை களையும், மகாசக்தியையும் அறிவதற்கே மனிதன் பூர்வஜென்மத்தில் சுகிர்தம் செய்திருக்க வேண்டும்.

தேவகாரியங்கள் சம்பவிக்கும் விதம்:—

உலகில் தெய்வாம்சம் பெற்ற காரியங்களெல் லாம் திடுதிப்பென்று நடைபெறும்; மனிதன் எதிர்

பாராமலேயே நிகழும். இவை சத்புருஷர்களுக்கும் மற்றும் பிர்ம்ம நிஷ்டர்களுக்கும், மகனீயர்களுக்கும் தான்தெரியும். துரியாவஸ்தையில் 'அசரீரி' போல் அவர்களைத் தட்டி எழுப்பும். அன்னை ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின்வாக்குப் பலிக்க வேண்டாமா? மகரிஷி மைத்திரேயருக்கு உறுதி கூறியது நிறைவேற வேண்டாமா? தெய்வாம்சம் பெற்ற காரியங்களெல்லாம் மக்கள் எதிர்பாராமலே நடைபெறு மல்லவா? இப்போது ஐந்து வருஷங்களுக்கு முன்பு சத்புருஷர் ஒருவர் பிர்ம்மநிஷ்டாளாக வரப்போகிருரென்று யார் எதிர்பார்த்தனர்? அவர் அதிபாலியத்தில், தென்னகத்திலும், வடநாட்டிலும் முறை தவருது க்ஷேத்திராடனம் செய்து, பின்னர் ஸ்ரீ காசி க்ஷேத்திர மடைந்து, அங்குத் தங்கி, வேத வித்துக்களையும் அத்வைத வேதாந்திகளையும் தரிசித்து வேதாந்த விசாரம் செய்து வரும் நாளில், அவருக்குத் துரியாவஸ்தையில் அம்பிகையின் அருள்வாக்கு அசரீரிபோல் காதில் ஒலிக்க, ஸத்புருஷர் எழுந்து உட்கார்ந்ததும், ஒன்றும் புரியாது மீண்டும் தியானத்திலமர்ந்தார். அவருக்கு ஸத்குருகடாக்ஷம் ஏற்பட இருக்கிறதென்று யார் எதிர்பார்த்தனர்? எல்லாம் தேவ காரியங்களாகவே ஸம்பவிக்கின்றன என்பதை ஈண்டு அறிதல் வேண்டும்.

அம்பிகையின் வாக்கு:—

அம்பிகை, குழந்தையைத் தட்டி எழுப்புவதுபோல் மேலும் தட்டி எழுப்பி "ஸத் குருவை நாடி நேபாளத்துக்குப் புறப்படு. அங்குச் சத் குருவான சிவபுரி மகாராஜ் உன்னை எதிர்நோக்கியிருக்கிருர். பிர்ம்ம நிஷ்டாளான சிவபுரி மகாராஜரைத்தரிசித்து அவரது

அனுக்கிரகம் பெற்றுக் கொள்" என்று ஸ்ரீ அம்பிகையின் வாக்கு மேலோங்கி நின்றது. இந்தச் சத்புருஷரும் மயக்கம் தெளிந்து மறுநாட் காலை நேபாளம் நோக்கிப் பிரயாணமானார். ஓடோடிச் சென்றார். ஸ்ரீ விவேகானந்தரை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஆவலுடன் காத்திருந்து, சிஷ்யராக வரவேற்று, ஏற்றுக் கொண்டது போல், சுமார் 140 வயதுள்ள பிர்ம்ம நிஷ்டாளான சிவபுரி மகாராஜரும் இந்தச் சத் புருஷரை ஆனந்தக் கண்ணீர் மல்கியவராய், உள்ளன்புடன் வரவேற்று, தேகத்தைத் தடவிக் கொடுத்து உபதேசமூலம் அருள் வாக்களித்துத் தமது சீடராய் ஏற்றுக் கொண்டது தெய்வாம்சம் பெற்ற நிகழ்ச்சி என்று ஏன் சொல்லக் கூடாது? இது சாதாரணமாக நடக்கக் கூடிய காரியமா? நேபாள மெங்கே? தட்சிண தேசமெங்கே?

குகேஸ்வரியின் அருட்செயல்:—

நேபாள தேசத்தில், ராஜ வம்சத்தினரால் மூன்று தலை முறைகளாக 'சுச்ருஷை" செய்யப் பெற்றும் போற்றப் பெற்றும் வந்த தபோதனர் யார்? அவர் தான் வேதவித்துக்களாலும், மக்களாலும் பூஜ்யரென மதிக்கப் பெற்று வந்த பிர்ம்ம நிஷ்டாள் சிவபுரி மகாராஜ் அவர்களாகும். அப்பெரியோரான சிவபுரி மகராஜ் உத்கிருஷ்டமான நம்பூதிரி பிராமணர்; பல சாஸ்திரமறிந்தவர். பல பாஷைகளும் பேசுபவர். பீஷ்மர் அம்புப் படுக்கையில் படுத்திருந்து உத்தராயணத்தை எதிர்பார்த்திருந்தார். ஆனால், சிவபுரி மகாராஜரோ தர்ப்பாசனத்தில் படுத்துத் தவமிருந்து சிஷ்யரை எதிர்பார்த் திருந்தனரென்று கூறலாம்.

அவர், தக்க சிஷ்யரை எதிர் பார்த்திருந்ததும், அவரது ஆவல்பூர்த்தி பெற இந்த 'ஸத் புருஷர்' பசுவைத் தேடி அதன் கன்று ஓடுவது போல், அப்பிர்ம்ம நிஷ்டாளை நாடி நேபாளம் சென்று, உபதேசம் பெற்றதும் நேபாளத்தில் கோயில் கொண்டு விளங்கும் குகாம்பிகையின் அருட் செயலே யாகும். குகேஸ்வரியும் தட்சிண தேசத்திலிருந்து ஒரு புண்ணிய சத்புருஷன் வருவான். அவனுக்கு "நீ அனுக்கிரகம் செய்வாயாக" என்று சிவபுரி மகாராஜருக்கும் அசரீரி ஏற்பட்டதன் மூலம் அவரும் தட்சிணதேசத்துச் சிஷ்யனை எதிர்பார்த்திருந்ததில் வியப்பொன்று மில்லை. அம்பாளுடைய வாக்கியத்தை மேற் கொண்டவராகவும், சிவபுரி மகாராஜரின் அனுக்கிரகம் பெற்றவராகவும் இந்தப் புண்ணிய புருஷர்தான் திருச்சி சுவாமிகள் என்று புகழ்கொண்டு விளங்கும் இச்சரித்திரத்தின் புண்ணிய புருஷர்.

ஸ்ரீ சிவபுரி மகாராஜரின் அத்தியந்த சிஷ்யர்:—

இப்பரமசிஷ்யர் நேபாளத்திலே சில காலம் தங்கி புண்ணிய நதிகளில் நீராடி, மூர்த்தி, தலம் முதலியவைகளைத் தரிசித்துவிட்டு, பின்னர் கைலாச யாத்திரையை விதிவத்தாக முடித்துக் கொண்டு, பூரண பிர்ம்ம நிஷ்டாளாக தட்சிணதேசம் திரும்புவாரென்பதை யார் எதிர்பார்த்தனர்? மேலும், தென் கன்னட தேசத்தில் பெங்களூருக்கு, ஏழு மைல் பக்கத்தில், மைசூர் ரோடில், கஞ்சன ஹள்ளி பிரதேசத்தில், பொன்மயமான இடத்தில், பிர்ம்ம நிஷ்டாளான நேபாள சிவபுரி மகாராஜரின் சிஷ்யருக்குக் கைலாச ஆசிரமம் ஏற்படப் போகிறதென்று யார் நினைத்திருக்

கக்கூடும்! இதுதான் அன்னையின் தேவ ரகசியம்? பலரும் இதனை ஸ்ரீ அன்னையின் அருட் செயலென்றே கூறுவர். மகாதபஸ்வியாம் பிர்ம்ம நிஷ்டாளான சிவபுரி மகாராஜரின் அத்தியந்த சிஷ்யராக விளங்கும் இந்த சத் புருஷர், இப்போது திருச்சி சுவாமிகளெனப் பெயர் கொண்டு, தென்னகத்தில் பிரசித்தி பெற்றுள்ளார்.

ஆசிரம சங்கல்பம்:—

திருச்சியிலிருந்த காரணத்தால் திருச்சி சுவாமிகளென அழைக்கப்பெறும் இந்த பிரம்ம நிஷ்டாள் கைலாச யாத்திரையிலிருந்து திரும்பி தென் தேசம் வரும் போது, தமக்கென ஓர் ஆசிரமம் தேவையில்லை யென்றுதான் நினைத்தனர். அது விஷயத்தில் பிடிவாதமாகவும் இருந்தனரென்று கூறலாகும். பக்தர்கள் பலமான கோரிக்கை செய்து கொண்டதன் மீது, அவர்களின் தெய்வீக திருஷ்டி கர்நாடக தேசத்தின் மீது விழவும், இதற்கேற்றாற்போல், பம்பாய் மார்க்கமாக வரும் போதே, மேலும், பலபக்தர்களும் பிரம்ம நிஷ்டாளைக் கர்நாடக தேசத்துக்கு அழைத்ததும் பொருத்தமாக இருந்தது. பிரம்ம நிஷ்டாளின் சங்கல்பமும், பக்தர்களின் கோரிக்கையும் இவ்விஷயத்தில் ஒத்திருந்தன வென்று தான் கூற வேண்டும். இதனைத் தெய்வ ஸங்கல்பமென்றும் பெரியோர் கூறுவர்.

மற்றொரு காரணம்:—

மற்றொரு குறிப்பிடத்தக்க ஸம்பவம், பிரம்ம நிஷ்டாள் பம்பாயிலிருந்து திரும்பியபோது நிகழ்ந்தது. அவர்கள் பிரயாணம் செய்த வண்டியிலேயே இரண்டு

அத்வைத ஸந்நியாசிகள் யாத்திரையாக வந்தார்கள். பெங்களூரில் இருக்கும் மடாலயங்களில் சந்நியாசிகள் தங்குவதற்குத் தகுந்த இடமில்லை யென்றும், பிக்ஷை வசதிகளும் செய்து கொடுக்க ஏற்பாடில்லை யென்றும் அவர்கள் பேசிக்கொண்டதும் பெங்களூரில் ஸ்ரீகைலாச ஆசிரமம் ஏற்படுவதற்கு ஒரு காரணமாக விருந்ததென்று சொல்லின் அதுவும் பொருத்தமாக இருக்கும்.

கெஞ்சன ஹள்ளியில் ஸ்ரீகைலாச ஆசிரமம்

ஸ்ரீ அன்னை ராஜ ராஜேஸ்வரியின் பூரண அனுக்கிரகத்தைப் பெற்றுள்ள பிரம்ம நிஷ்டாளுக்குப் பக்தர்களது கோரிக்கையின் பேரில், ஆசிரம சங்கல்பம் ஏற்பட்டதும், கர்நாடக தேசத்துப் பக்தர்கள் தீவிரமாக ஆசிரமம் ஏற்படவேண்டிய இடத்தைத் தேடி ஆராய்ந்தார்கள். சண்ட முண்டர்களைக் கொன்று, தர்மத்தை நிலைநிறுத்திய ஸ்ரீ அன்னை சாமுண்டேஸ்வரியின் பாத ஸ்பரிசம் பெற்ற கர்நாடக தேசத்தில், பங்களூருக்குச் சமீபித்துள்ள கெஞ்சன ஹள்ளி என்ற கிராமத்தில், சந்நியாசிகள் வதியும் ஸ்தலத்தில் பிரம்மநிஷ்டாளின் தெய்வீகப் பார்வை விழுந்தது. பிரம்ம நிஷ்டாளின் பெங்களூர் விஜயம் அதனை எல்லா வழிகளிலும் பாக்கியம் பெற்றதாகச் செய்துவிட்டது. இப்போது பெங்களூர் நகரம் இந்தியாவிலேயே எல்லா அம்சங்களிலும் பாக்கியம் பெற்றதாகத் திகழ்கின்றது.

ஸ்ரீகைலாச ஆசிரம ஸ்தாபனம்:—

பொன்மயமான கஞ்சன ஹள்ளியில், சுமார் பத்து ஏக்கர் விஸ்தீரணத்தில், சுற்றிலும் மேட்டுப் பாங்கான கிராமங்கள் சூழ்ந்திருக்கச் சமவெளியான பூமியில் சந்நியாசிகள் வசிக்கக்கூடிய இடத்தில், எல்லா வாத்தியங்களும் முழங்க, வேதவித்துக்கள் ஆசீர்வதிக்க, சார்வரி ஞு வைகாசி மீ பௌர்ணமி நன்னாளில், பக்தர்களால் ஸ்ரீகைலாச ஆசிரமம் ஏற் படுத்திக் கொடுக்கப் பெற்றது, இப்போது இவ்வா சிரமம் பக்தர்களுக்கு யாத்திரை ஸ்தலமாக விளங்கி வருகின்றது.

ஸ்ரீ கைலாச ஆசிரமத்தின் விசேஷம்

பெங்களூர்—மைசூர் ரஸ்தாவில் கஞ்சன ஹள்ளி யில், எல்லா வசதிகளும் நிறையப் பெற்றுள்ள ஸ்ரீ கைலாச ஆசிரமம் புனிதத் தன்மை வாய்ந்த தொன்றாகும். அன்னை ஸ்ரீ சாமுண்டேஸ்வரியின் பாத ஸ்பரிசம் பெற்றப் பிரதேசமாதலால், அன்னை மாதாவைக் காண குழந்தைகள் தேடி வருவது போல், பக்தர்கள் தினந்தோறும் நூற்றுக் கணக்காக ஸ்ரீ கைலாச ஆசிரமத்திற்கு விஜயம் செய்து, பிரம்ம நிஷ்டாளைத் தரிசித்துப் போகும் காட்சி அபூர்வ நிகழ்ச்சியாக இருந்து வருகின்றது. ஸ்ரீ கைலாச ஆசிரமம் என்னும் பெயருக் கொப்ப, அங்கு அமைந் துள்ள புண்ணிய தீர்த்த விசேஷம்தான் பிரதானமாக இருந்து வருகின்றது. இந்தத் தீர்த்தம் தீராத பல நோய்களையும் தீர்க்கக் கூடிய சக்தியுள்ள தென்று பல டாக்டர்களும் கூறுகின்றார்கள்.

மன அமைதிக்கு ஏற்ற இடம்:—

இதன் சீதோஷ்ண ஸ்திதியும் மனதுக்கு இன்பமாயிருக்கின்றது. சந்நியாசிகளும் மற்றும் பக்தர்களும் அமைதி பெற்றுத் தவம் செய்யக் கூடிய ஸ்தலமாகவும் திகழ்கின்றதென்று அனுபவ பூர்வமாகப் பல பெரியோர்கள் சொல்லத் தெரிகின்றது. பக்தர்கள் ஆசிரமத்திற்கு எப்போதும் வரலாம். அவரவர்களின் மனத்தொல்லைகளை ஒருவாறு மூட்டை கட்டி, எட்டி வைத்துவிட்டு, நிம்மதியாக இருந்து தரிசனம் செய்து மன அமைதிக்கு வழி தேடிக் கொள்ளலாம். உலகத்து அமளிகள், தொல்லைகள் கவலையைத் தரக்கூடிய சம்பவங்கள், உலகத்துச் சேதிகள் இவை யொன்றைப் பற்றியும் ஆசிரமத்தில் பேசுவோரில்லை. ஆங்கு குழுமியுள்ளோரிடத்தும், ஆசிரமம் தேடிவரும் பக்தர்களிடத்தும், தெய்வ மணம் கமழ, தெய்வாம்சம் பெற்றுள்ள பேச்சுக்களே நிலவுவதைப் பார்க்கும் போது, ஆசிரமத்தின் விசேஷத்தை என்னென்று உரைப்பது ?

ஆசிரமம் ஒரு பெரிய சத் சங்கம்:—

மனிதன் நிறை மனிதனாக ஆவதற்குத் தகுந்த இடம் கஞ்சன ஹள்ளி ஸ்ரீ கைலாச ஆசிரமம் தான் என்று அழுத்தமாகச் சொல்லக்கூடும். ஸ்தரீ புருஷர்கள் பிரம்மநிஷ்டாளைத் தரிசிக்கத் தொகுதி தொகுதியாக ஆவலுடன் மரங்களின் நிழல்களில் தங்கியிருப்பதும், அவர்கள் பேசும் பேச்சுக்களில் தெய்வீக இனிமை அமைந்திருப்பதும் யாரையும் பரவசப்படுத்துமென்பதில் சந்தேகமில்லை. அதிகாலையில் அவரவர்கள் ஸ்நானாதிகளை முடித்துக் கொண்டு, அவரவர்களுக்கேற்ப நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்து விட்டு

புஷ்பத் தூக்குகளிலும், காகிதப்பைகளிலும் தேங்காய் பழவர்க்கங்களை ஏந்தினவர்களாய், அவர்கள் ஆசிர மத்தினுள் பிரவேசமாகும் அரிய காட்சி மனத்தை உருக்கக் கூடிய காட்சியென்றுதான் யாவரும் கூறுவர். இத்துடன் ஆசிரமத்தில் பல ரக புஷ்பச் செடிகளும், சுவாஸனை பொருந்திய மலர்களும் ஆசிர மத்திற்கு அழகையும், தெய்வ மணத்தையும் அளிக் கின்றன. வாழை, மா, கமுகு, தென்னை, பலா முதலிய பல விருட்சங்களும் தனித்திருந்து தவம் செய்வதற் குரிய இன்ப நிழலை வழங்குகின்றன. சாதுக்களும், சந்நியாசிகளும் ஆத்ம விசாரம் செய்வதற்குரிய நிகரில்லாத ஸ்தலமாக இவ்வாசிரமம் விளங்குகின் றது. அணிற்பிள்ளைகளும் பட்சிஜாலங்களும் காலை யிலும் மாலையிலும் ஆத்மவிசாரம் செய்வது போல், ஒன்றுக் கொன்று கூடிக் குலாவிப் பேசிக் கொள் கின்றன. இவை மட்டுமா? இரண்டு பெரிய மகா சர்ப்பங்கள் ஆசிரமத்தின் பக்கங்களில் திரிந்து வருவதும், அவை ஜனக்கூட்டத்தைக் கண்டு அஞ்சி விலகாமலிருப்பதும், தாங்களும் ஆசிரமவாசிகளைச் சேர்ந்தவர்களென்று சொல்லும்படியாகக் காட்சியளிக் கின்றன. காலையில் கீதை பாராயணம் ஒருபுறம்; வேதாந்த பாடம் மற்றொரு புறம்; தேவார, திரு வாசகம் ஓதுதல் இன்னொரு புறம் நடைபெறுகின்றன. பிரதி வெள்ளிக்கிழமையில் பஜனையும், சங்கீர்த்தனங் களும் பரவசத்தை எழுப்புகின்றன. சுருக்கமாகக் கூறு மிடத்து, ஸ்ரீகைலாச ஆசிரமம் மனச்சாந்தி பெறுவதற் கும், ஆத்மஞான மடைவதற்கும் ஏற்றவிடமாகத் திகழ்ந்து வருவது பக்தர்களின் அதிர்ஷ்டவசமே யாகும்.

2

மகா சத்புருஷர் யார்?

திருச்சி சுவாமிகளான நமது மகாசித்த புருஷர் யார்? கஞ்சனஹள்ளி, ஸ்ரீ கைலாச ஆசிரமத்தில் விளங்குபவரின் திருமேனி எத்தகையது? என்பதைப் பக்தர்கள் அறிய ஆவல் கொள்வது ஸகஜம்.

''சுமார் ஐந்தடி உயரமிருக்கும்; சிவந்த நிறம்; பரந்த நெற்றி; வாள்போல் வளைந்துள்ள நெருங்கிய புருவம்; ஜ்வலிக்கின்ற கண்கள்; அனுக்கிரக சக்தி வாய்ந்த திருஷ்டி; மலர்ந்த விலாசம்; மந்தகாச முடைய புன்னகை; கன்னம் வரை முகத்திற்கு அழகை யளிக்கும் செவிகள்; அரும்பு போன்ற உதடுகள்; அழகு வாய்ந்த நாசி; பக்தர்களின் குறைகளைப் பார்த்த மாத்திரத்தில் நீக்கக் கூடிய அனுதாபப் பார்வை; வணங்கும் பக்தர்களின் அபீஷ்டங்களைப் பூர்த்தி செய்து வைக்கக் கூடிய அவரது திடமான ஆர்வம்; முடிபோடாத அவரது கருமையும் மென் மையுமான கேசத்தைப் பார்த்தால், ஏதோ ஒரு விரதத்தை நிறைவேற்றுவான் வேண்டி, கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவர் போன்ற ஒரு கம்பீரத் தோற்றம்; தும்பைப் பூப் போன்ற வெள்ளை வஸ்திர முடுத்தி, அதையே போர்த்திக் கொண்டு, நாற்காலி யில் அசையாது அருட்பொலிவுடன் வீற்றிருந்து பக்தர்களுக்கு இதமான பொன்மொழி உபதேசங்களை எடுத்துக் கூறும் அலாதியான பான்மை; நாஸ்திகர் களும், குதர்க்க வாதிகளும் பார்த்த மாத்திரத்தில் மாவுத்தனிடம் யானை அடங்கியிருப்பது போல், வாய் பேசாது, பிர்ம்ம நிஷ்டாளிடம் பயபக்தியுடன் நடந்து கொள்வது பேராச்சரியங்களில் ஒன்ருகும். இந்த

அற்புதங்களையும் ஆச்சரியகரமான நிகழ்ச்சிகளையும் கவனிக்கும் போது, இம்மகா புருஷரின் வம்ச வரலாற்றை அறிய யார் தான் விரும்ப மாட்டார்கள்?

திரிசூலம், சங்கு சக்கரம் அடையாளங்கள்:—

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியின் அருள் பூத்த இம்மகா புருஷரின் இதயமோ பக்தர்களை அன்புடன் அழைக்கும் தன்மையதாக இருக்கின்றது. ஏழையாயினும் சரி, அரசனாயினும் சரி, எல்லோரும் இறைவன் முன்பு சமமென்றுள்ள இவரது மனப்பான்மை யாவராலும் கொண்டாடக் கூடியதாக இருக்கின்றது. இம்மகா புருஷரின் சத்சங்கமும், இவரது அந்தக்கரண சுத்தியும் பக்தர்களைக் காந்தம் போல் தம் வசப்படுத்துகின்றன. "திரிசூல" அடையாளம் உள்ளங்கைகளில் பிரகாசிக்கின்றது. இது மட்டுமா? இரு பாதங்களிலும் சங்கு சக்கர ரேகைகள் காட்சியளிக்கின்றன.

பிர்ம்ம நிஷ்டாளின் வம்ச வரலாறு

இந்த மகா புண்ணிய புருஷர் ஒரு காலத்தில் பாரத நாட்டின் தென்பகுதி யனைத்தையும் தம் ஒரு குடைக்கீழ் ஆண்டு வந்த ஆந்திரதேசத்து விஜய நகர மன்னன் ஸ்ரீ கிருஷ்ண தேவராயர் அவர்கள் வம்சத்தைச் சேர்ந்தவரென்று தெரிகிறது. அக்காலத்தில் மேற்கண்ட வம்சத்தின் மூதாதையர் ஒருவர் தென் பகுதி நாடுகளுக்கு ராஜப் பிரதிநிதியாக நியமிக்கப் பெற்றதும், அவர் மதுரை மாநகரத்தைத் தலைமை ஸ்தலமாகக் கொண்டு "நாயிக்" என்ற பட்டத்துடன்

பதினெட்டுத் தலைமுறைகள் ஆட்சி செய்து வந்ததும், பிறகு, கால பேதத்தால் ஆந்திர ராஜ்யங்கள் சிதைவுற்றன என்பதும், பின்னர், மொகலாயரும், பிரிட்டிஷாரும் முறையே ஆட்சி புரிந்து வந்ததும் சரித்திர விஷயங்களாகும்.

கடைசியாக, அந்த "நாயிக்" வம்சத்தில் சீரும் சிறப்பும் வாய்ந்த ஸ்ரீ பிரசன்ன லட்சுமண சுவாமி "நாயிக்"கும், அவரைச் சேர்ந்தோரும் "பாளையபட்டு" ஆகவும், "பண்ணையார்" ஆகவும் ஆங்காங்கு பிரிந்து வாழ்ந்து வந்தனர். ஸ்ரீ பிரசன்ன லட்சுமண சுவாமி "நாயிக்" அவர்கள் திருநெல்வேலி ஜில்லா, சாத்தன் குளம் கிராமத்தில் குடியேறி வாழ்ந்து வந்தனர். அவருக்குப் "பாளையப்பட்டும்" ஏராளமான பூ சொத்துக்களுமிருந்து வரும் நாளில், மேற்படி ஜில்லா ரவண சமுத்திரம் என்ற ஊரில் ரவணப்ப 'நாயிக்' அவர்களின் மகன் வயிற்றுப் பேத்தியாராகிய ஸ்ரீ கோதை வல்லித் தாயார் அவர்களை மேற்படி பிரசன்ன லட்சுமண ஸ்வாமி "நாயிக்" அவர்களுக்கு விவாகம் செய்து வைக்கப் பெற்றது. விவாகம் நடந்து மூன்று வருஷ காலத்தில், இவர்களுக்கு ஓர் ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தன. ஆண் குழந்தைக்கு ஆதிநாராயண சுவாமி என்று பெயரிடப் பெற்றது. பெண் குழந்தையோ அதே வருஷத்தில் காலமாகி விட்டது. பின்னர், மூன்றும் வருஷக் கடைசியில் பிரசன்ன லட்சுமணசாமியும் விஷ்ணுபத மெய்தினர். ஆறாத் துயரத்தில், ஆழ்ந்திருந்த ஸ்ரீ கோதை வல்லித் தாயார் தன் மகன் ஆதி நாராயணனுடன் தனது தகப்பனார் ஊராகிய ரவணசமுத்திரத்துக்குப் போய்க் குடியேறினர்.

செல்வி ஸ்ரீரங்கநாயகி - செல்வன் ஆதிநாராயணன் திருமணம்:—

ஒரே மகனான ஆதி நாராயண சுவாமிக்கு வயது பதினெட்டு பூர்த்தியடைந்தது. திருநெல்வேலி ஜில்லா நெல்லையப்பர் கோயில் முன்னாள் பரம்பரை டிரஸ்டியாக இருந்து, நிர்வாகத்தில் நற்பெயரும் கீர்த்தியும் பெற்றுள்ள ஸ்ரீ கிருஷ்ணசுவாமி "நாயிக்" அவர்களின் ஒரே செல்வ புத்திரி ஸ்ரீரெங்கநாயகிக்கும் செல்வன் ஆதிநாராயணனுக்கும் திருமணம் நடத்தி வைக்கப்பெற்றது. செல்வி ஸ்ரீரெங்கநாயகியும் ஸ்ரீ ஆதிநாராயணனும் இல்லறம் நடத்தி வந்தபோது, இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதுவும் தவறிப் போய்விட்டது. இது குறித்துப் பெற்றோர்கள் ஆறாத் துயரத்தில் ஆழ்ந்திருந்தனர். ஆதிநாராயணன் ரெங்கநாயகி இருவரும் ஒரு க்ஷேத்திரம் பாக்கியில்லாது, தரிசனம் செய்து வந்தார்கள். புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, அம்பா ஸ்ரீரா ஜராஜேஸ்வரியை எப்பொழுதும் தியானம் செய்த வண்ணமாக இருந்தார்கள். கன்னியாகுமரிக்கும் சென்று, அங்குள்ள அம்பாளை திரிகரண சுத்தர்களாய் வழிபட்டு, ஓர் ஆண் குழந்தைக்குப் பெருந்தவ மிருந்தார்களென்று சொல்வது மிகையாகாது.

கன்னியாகுமரி கோயிலில் கேட்ட அசரீரி:—

கன்னியாகுமரியில் கோயில் கொண்டு விளங்கும் அம்பாளைத் தரிசித்து விட்டுத் திரும்பிய காலை, யாரோ ஒரு ஸ்திரீ பக்கலில் வந்து "ஏன் கவலைப் படுகிறீர்கள். அம்பாள் அனுக்கிரகம் உங்களிருவருக்கும் பூரணமாக இருக்கிறது இன்றே பழநிக்குப்

புறப்படுங்கள். அங்குப் பழநி வேலனைத் தரிசித்து, ஆடிப்பாடி மகிழ்ந்திருங்கள். நல்ல ஸத்புத்திரன் ஒருவன் அம்பாளின் அனுக்கிரகத்தாலும், பழநி யாண்டவன் அருள் பிரசாதத்தாலும் ஜோதி மய மாக அவதரிப்பான். கவலையை விடுங்கள். பிறக்கும் பிள்ளையால் உலக மக்களுக்கு நன்மையுண்டாகும்" என்று சொல்லிவிட்டுச் சட்டென மறைந்தாள். தம் பதிகளுக்கு ஒன்றும் புரியவில்லை. அசரீரி போல் வந்து சொல்லிய ஸ்திரீயையும் காணோம். இன் னது செய்வதென்று தம்பதிகளுக்குத் தெளிவும் ஏற்படவில்லை.

ஸ்ரீபழநி யாண்டவர் பிரசாதம்:—

பிறகு, தீர்க்காலோசனையின் பேரில், ஸ்திரீயின் தீர்க்க தரிசனத்தில் இவர்களுக்கு நம்பிக்கை ஏற் பட்டது. பழநியாண்டவனைத் தரிசிக்கப் பழநிக்கு யாத்திரை சென்றார்கள். அங்கும் தம்பதிகளிருவரும் பழநியாண்டவனை 45 நாள் தங்கி, முறைப்படி, தரி சனம் செய்து தவமிருந்தார்கள். அங்கு சத்சங்கங் களில் சேர்ந்து சாதுக்களை உபசரித்தலிலும் கலந்து கொண்டார்கள். பழநியாண்டவனுடைய மகிமைகளைக் கேட்டு மகிழ்வுற்றிருந்த காலை, 45வது நாள் இரவு ஸ்ரீ ரெங்கநாயகி அம்மாளுக்கு வயிற்றில் "திரிசூலம்" ஒன்று வந்து விழுந்ததாக அதிர்ச்சியுற்றாள். எழுந்து தாம் கண்ட கனவைத் தமது கணவரிடமும், பக்கத்திலிருந்தவர்களிடமும் சொல்லவே, அவர்களும் ஸ்ரீ:ரெங்கநாயகிக்கு ஆறுதல் கூறி, ஆண்டவனுடைய பிரசாத மகிமையால், ஓர் ஆண் குழந்தை பிறக்கு மென்று தம்பதிகளைப் பாராட்டினார்கள்.

ஸ்ரீ ரெங்கநாயகி அம்மாளும் கர்ப்பவதியானார். அந்த நாளிலிருந்து, தம்பதிகளிருவருக்கும் பல மகான்கள் தரிசனமும், சாதுக்கள் வருகையும், அவதூதர்களின் ஆசிகளும் கிடைத்துக் கொண்டிருந்தன. மகான்களும் ஒரு சொல்லாகவே "ஆண் குழந்தை பிறக்கும். அது பிரம்ம நிஷ்டாளாக இருந்து, பக்தர்களுக்கு வாழ்வில் கடாட்சமளிக்கும்" என்று மகிழ்வுடன் கூறிப் போந்தார்கள்.

மகான்கள் சொல் பலித்தது:—

உண்மையாகவே, மகான்களின் சொல் பலித்தது தான் தேவ ரகஸ்யமாகும். குறிப்பாக, ஸ்ரீ சிங்கேரி பீடாதிபதியாகிய ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதி சுவாமிகள் அவர்களும் ஸ்ரீ ரெங்கநாயகி அம்மாளுக்குக் கற்கண்டு பிரசாதம் வழங்கி, "சத்புத்திரன் உண்டாவான்" என்று திருவுளம் மகிழ்ந்தார்களாம். கர்ப்பவதியானதிலிருந்து தனது சொந்த ஊராகிய மதுரையை விடுத்து, தாமிரபரணி நதிதீரம், பாபநாசம் க்ஷேத்திரம் பக்கத்தில், அகஸ்தியகூட பர்வதத்தின் அருகாமையிலுள்ள விக்ரம சிங்கபுரத்தில் உடல் நலனுக்கு உற்றதென்று கருதி, அங்கு வசித்து வந்தார்கள். பிரசவத்திற்கான ஏற்பாடுகளும் செய்யப் பெற்றன. பெரியோர்கள் புனிதமான ஊரென்று கருதி, இந்த ஸ்தலத்தைத் தெரிந்தெடுத்தனர் போலும்!

பிர்ம்ம நிஷ்டாள் அவதாரம்

பெரியோர்கள் வாக்குப் பொய்க்காதென்று சொல்வார்களல்லவா? நல்லோர் விஜயம் நலன்

களையே அளிக்கும் என்பதும் வீண்போகாதல்லவா ? ஸ்ரீ ரெங்கநாயகி விக்ரம சிங்கபுரத்திற்குப் பிரசவத்திற்காக வந்த நாளிலிருந்து, அக்கிராமத்திற்குச் சுபிட்சம் ஏற்பட்டது. கிராம ஜனங்களும் மகிழ்வுற்று, சத் சங்கம் கூடி, பகவானை இன்னும் விசேஷமாகக் கொண்டாடினார்களாம். கோயில்களில் உற்சவங்களை நடத்தி, கிராம தேவதைகளுக்கும் நின்றிருந்த விழாக்களை மீண்டும் ஒன்றுபட்டுச் செய்து முடித்துக் களிப்புற்றிருந்தார்களாம். உரிய காலங்களில் கோயில்களில் மேள வாத்தியங்களும், வேதம், தேவாரம், திருவாசகம் போன்ற தெய்வீகப் பாடங்களும் மும்முரமாக நடந்து வந்தனவாம்.

எல்லோரும் இன்புற்றிருக்க, விக்கிரம சிங்கபுரத்தில், ஸ்வஸ்தி ஸ்ரீ விஜயாப்தமான சாலிவாகன சகாப்தம் 1851, கலியப்தம் 50 29, இங்கிலீஷ் 1929 மார்ச்சு மீ 20ந்தேதி, தமிழ் விபவ ஹூ, பங்குனி மீ 7ந்தேதி, புதன்கிழமை, பூச நட்சத்திரம், மகர லக்னத்தில், சுபயோக சுப வேளையில் புண்ணிய புருஷரான நமது திருச்சி சுவாமிகள் அவதாரமானார். ஸ்ரீ ரங்கநாயகிக்கு ஆண் குழந்தை பிறந்தது என்று ஊரெங்கனும் சந்தோஷ நற்செய்தி பரவியது. அன்று புண்ணிய தினமாகையால், கோயில்களிலும் கிராம தேவதைகளுக்கும் அபிஷேக அர்ச்சனைகள் செய்யப்பட்டன. ஏழைகளுக்கு அன்ன தானங்களும் குறைவில்லாது வழங்கப்பட்டன. குழந்தையைப் பார்த்தவர்கள் அதன் பெற்றோர்களைப் பாராட்டினார்கள். குழந்தையும் நன்றாக வளர்ந்து கொண்டிருந்தது. வாரத்திற்கு ஒரு முறையேனும் சித்தபுருஷர்களோ, மகான்

களோ யாரேனுமொருவர் வந்து பார்த்துக் குழந் தையை ஆசீர்வதிக்காமலில்லை.

குழந்தைக்குப் பெயர் வைத்தல்:—

பிறந்த குழந்தைக்கு என்ன பெயர் வைப்பதென் பது இவ்வைணவ குடும்பத்தில் பெரிய சர்ச்சையாக இருந்தது. குழந்தைக்கு வைணவ சம்பந்தமான பெயர் வைக்க வேண்டுமென்று உற்ருர் உறவினர் களும், இன்னும் பலரும் அபிப்பிராயம் கொண்டனர். ஆனல், பெற்ருேர்க்கு மட்டும், பழநி பஞ்சாமிர்தப் பிரசாதம் சாப்பிட்டதனுலும், பழநியாண்டவன் கொடுத்த வரப்பிரசாதமானதாலும் தமது குழந்தைக் குப் பழநிசுவாமி என்று நாமம் இட வேண்டுமென்று தீவிரமான அபிப்பிராயம் இருந்து வந்தது. தங்கள் குலத்தில் சிவபரமான நாமங்கள் யாருக்குமே வைத்த தில்லையென்று உறவினர் தரப்பிலும் பலமாக வாதிக் கப்பட்டது.

அமாவாசை சுவாமிகள் விஜயம்:—

இவ்வாருக, இரண்டு வருஷங்கள் கழிந்தன. குழந்தையும் "சாமி" என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. இப்படியிருக்கும் நாளில், மூன்ருவது வயதில் குழந்தைக்குக் கடுமையான சுரம் கண்டது. அக் காய்ச்சல் அனைவருக்கும் அதிகக் கவலையைக் கொடுத்தது. குடும்பத்தினர் விசாரத்தில் ஆழ்ந்திருந்த சமயம் "அமாவாசை சாமி" என்னும் மகாபுருஷர் திடு திப்பென்று வீட்டுக்குள் வந்தார். குழந்தை படுத்திருந்த விடத்திற்குச் சென்ருர். குழந்தை தனது ஸ்மரணை யில்லாது உறங்கிக் கொண்டிருந்தது. அமாவாசை

சுவாமியும் குழந்தையைத் தட்டி எழுப்பி, "ஏ பழநி சாமி, ஏ பழநிசாமி, ஏ பழநிசாமி" என்று மூன்று முறை கூப்பிட்டுக் குழந்தையை எழுந்திருக்கச் சொன்னார். குழந்தையும் அதியாச்சரியமாக அனைவரும் பார்த்திருக்க, எழுந்து உட்கார்ந்தது. அமாவாசை சாமியைப் பார்த்ததும், கும்பிட்டுப் புன்னகை பூத்துப் பொலிவுற்று விளங்கியது. அமாவாசை சாமியும் தமது கையிலிருந்த விபூதியை மந்திரித்து உடம்பில் பூச, குழந்தைக்கும் சுரம் தணிந்து விட்டது. இது கண்டு அனைவரும் அதிசயித்தனர். எல்லோரும் முடிவாக, அன்று முதல் குழந்தையை "பழநிசாமி" என்று திருநாமமிட்டு அழைத்து வரலாயினர்.

பள்ளியில் வாசித்தல்:—

பிற்காலத்தில், தேஜோவானாக விளங்க இருக்கும் பழநிசுவாமிக்கு 5 வயது ஆனதும், பெற்றோர்கள் அவனைப் பள்ளியில் சேர்த்தனர். ஏதோ ஒரு அதிசயப் பொருளைப் பார்ப்பது போல், பள்ளிக் குழந்தைகளும் பழநிசாமியைச் சூழ்ந்துகொண்டு அவனோடு மழலைச் சொற்களில் பேசுவதும், உராய்வதும், கூடி விளையாடுவதுமாக இருந்தார்கள். பழநிசுவாமி தினந்தோறும் பள்ளிக்குப் போவது தவறுவதில்லை. வாத்தியார் சொல்லிக் கொடுப்பதை அப்படியே கவனித்துக் காது கொடுத்துக் கேட்பதுதான் அவனது கல்வி. வீட்டில் புஸ்தகத்தைத் தொடுவதோ, சிலேட்டுப் பலகையில் எழுதுவதோ கிடையாது. மறுநாள் வாத்தியார் கேள்வி கேட்கும்போது, முதல் நாள் கேட்டதை அப்படியே ஒப்புவித்து விடுவானும். வாத்தியாரும், தலைமை உபாத்தியாயரும் பழநிசுவாமியின் மதிநுட்பத்

தையும், அவனது கிரகிக்கிற, கூர்மையான ஆர்வத்தையும் கண்டு வியந்து பாராட்டுவார்களாம். அனைவரும் மதிக்கும்படியாகவும், பிள்ளைகள் கொண்டாடும்படியாகவும் பழனிசுவாமி நடந்து கொள்வதை ஊராரும் பெரியோரும் புகழ்ந்து கூறுவதுண்டாம். பள்ளிக்கு விஜயமாகும் கல்வியாளர் ஏவரேனும் "பழனிசுவாமி வகுப்பில் எப்படி?" என்று கேட்டால், வாத்தியார், "புஸ்தகங்களைத் தொட்டு மறியான்; கரும் பலகையில் எழுதியுமறியான். ஆனால், வகுப்பில் முதல் பையனாக விளங்குகிறான்" என்று சொல்லி, ஏதோ அவன் சரஸ்வதியின் கடாட்சம் பெற்ற குழந்தை என்று மகிழ்வுடன் பகர்வதுண்டாம்.

சாதுக்கள், சித்தர்கள் தரிசனம்

ஏழாவது வயது நடக்கும் போது, பழனிசுவாமி பள்ளிக்கூடத்திற்குப் பெயரளவில் போய் வருவானேயொழிய, பள்ளிக்கூடப் படிப்பில் அவ்வளவு நாட்டம் கொண்டதில்லை. கிராம விடுதிகளிலோ, கோயில்களிலோ சாதுக்கள் வந்திருக்கிறார்களென்று கேட்டால் போதும்! வாத்தியாரிடம் சில சமயம் சொல்லாமல்கூட வெளியே "கம்பி நீட்டி விடுவான்" பழனிசுவாமி. சாதுக்களைப் பார்த்ததும், அவர்களோடு நெருங்கிப் பழகுவான். அவர்கள் பேசிக் கொள்வதை கவனம் வைத்துக் கேட்டு, அடிக்கடி சந்தோஷப்படுவான். சாதுக்களும் சிறு பையனைக் கிட்ட அழைத்து உற்றுநோக்கி, உச்சி மோந்து, "இவன் நமது கோஷ்டியைச் சேர்ந்தவன்" என்று கூறி, பையனை ஆசீர்

வதித்துத் தட்டிக் கொடுப்பார்கள். பழநிசுவாமிக்கு 11 வயது வரை சித்தர்கள் தரிசினமும், சாதுக்கள் பழக்கமும் காலே மாலே, ஆலயதரிசனமும் தவருது ஏற்பட்டு வந்தன. இருந்தாற் போலிருந்து, வீட்டுக்கு ஓடோடி வந்து, வீட்டிலுள்ள, பட்சணங்கள், தின் பண்டங்கள், ஏன், அன்னத்தையும் கூட பாத்திரங் களில் எடுத்து வந்து, சாதுக்களுக்கு வழங்கி, ஆனந்த மடைவதுண்டாம். பழநிசுவாமிக்கு ஏற்பட்ட தொழில் கிராமத்திற்கு வரும் சித்த புருஷர்களேத் தரிசிப்பதும், அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதும், அவர்க ளோடிருப்பதும் தான். மேலும் அவர்கள் சம்பாஷணே யில் திளேத்திருப்பதைப் பார்க்கும் போது, ஏதோதான் ஒரு புதையலேக் கண்டுவிட்டதாக நிளேப்பான். இது குறித்து வீட்டாரும் பழநிசுவாமியைக் குற்றம்குறை கூற மாட்டார்களாம். கடிந்தும் ஒரு வார்த்தை சொல்ல மாட்டார்களாம். ஆனல், உலகக் குழந்தை கள் போல, படிப்புப் படித்துப் பரீட்சையில் தேறி உத்தியோகத்திலமர்ந்து, சம்பாதிக்க மாட்டாளு? என்று ஒரு ஏக்கமிருந்து வந்தது பெற்றோர்களுக்கு.

ஒரு பைரவ சந்யாஸியின் விஜயம்:—

என் செய்வது? பழநிசுவாமி வெறும் பள்ளிப் படிப்புக்காகப் பிறக்கவில்லே. உத்தியோகம் செய்து ஸம்பாதிப்பதற்காகவும் ஜனிக்கவில்லே. மனித ஜென்ம மெடுத்துப் பிரம்ம நிஷ்டாளாக ஆகி, மக்களுக்கு ஸ்ரீ அன்னேயின் ஆக்ஞைப்படி, நல்லுபதேசம் செய்யப் பிறந்தவரல்லவா? பழநிசுவாமிக்குப் பள்ளியின் மோகம் குறைந்தது. சாதுக்களின் தரிசனமும், பழக் கமும் அதிகமாயின. வீட்டிலும் பழநிசுவாமியின்

உறவு தாமரை இலையில் தண்ணீர் மிதப்பது போலிருந்தது. வீட்டில் பற்றும், பாசமும் குறைந்தாலும், பெற்ருேர்களிடத்தில் மட்டும் உள்ளன்பு குறையாதிருந்தது. இப்படியிருக்கும் நாளில் "நாய்க்குட்டி சாமி" என்ற மகா சித்த புருஷர் பழநிசுவாமி இருக்கும் கிராமத்துக்கு விஜயம்செய்தனர். அவர் ஒரு பெரிய பைரவ சந்நியாஸி. மந்திர சாஸ்திர மறிந்தவர். "நாய்க்குட்டி சாமி"யின் விஜயத்தைக் கேட்டவுடன், பழநிசுவாமிக்கு அளவற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. அப்போது பழநிசுவாமிக்குப் பதினைந்து வயது இருக்கும். "நாய்க்குட்டிசாமி'க்குப் பழநிசுவாமியைப் பார்த்தவுடன், அவனிடம் மோகித்து, அவனைக் கட்டித் தழுவி, முத்தமிட்டு, க்ஷேம ஸமாசாரங்கள் விசாரிப்பாராம். பழநிசுவாமியை ஒரு தக்க சத்பாத்திரமென்று உணர்ந்து, அவனை அருகில் அழைத்து சில மந்திரோபதேசம் செய்தார். அப்புறம் சொல்ல வேண்டுமா? பல சாதுக்களின் சேர்க்கையாலும் மகான்களின் தரிசனத்தாலும், பழநிசுவாமி கல்வி கேள்விகளில் சமர்த்தனாக விளங்குகிருனென்று கிராமப் பெரியோர்கள் சொல்லுவார்களாம். அது மட்டுமல்ல; ஆசார சீலத்தாலும், சன்மார்க்கப் பழக்கத்தாலும் பழநிசுவாமி பலருக்கும் ஓர் உதாரண பிர்ம்மசாரியாக விளங்குகிருனென்றும் கூறுவதுண்டாம்.

பழநிசுவாமியும் சித்த புருஷராஞர் :—

அர்ச்சுனன் துரோணரிடம் பக்தி கொண்டது போல், பழநிசுவாமியும் "நாய்க்குட்டி சாமி"யிடம் பக்தி கொண்டு, பல சித்துக்களைக் கற்று அவற்றைச்

செய்து காட்டி, மக்களை வியப்புறச் செய்து வந்தார். 17 வயது வரை சித்து விளையாட்டுக்களிலேயே, பழநி சுவாமி தனது பொழுதைப் போக்கி, அனைவரையும் வசியப்படுத்தி வந்தனர். ஊராரும் மற்றவர்களும் பழநிசுவாமியைக் கண்ணுக்குக் கண்ணாகப் பாவித்து, அவனிடம் பேரன்பு கொண்டு, பழகி மகிழ்வார்களாம். பழநிசுவாமிக்கு மந்திர சாஸ்திரங்களிலும், யோக சாஸ்திரங்களிலும் பயிற்சியும் தேர்ச்சியும் ஏற்பட்டு விட்டன. எனினும் பழநிசுவாமிக்கு மன அமைதி யில்லாமலிருந்தது. வேதாந்த சாஸ்திரத்தையும் தகுந் தவர்களிடம் கேட்டுத் தெளிந்து கொண்டாரென்றாலும், மன அமைதிக்கு மருந்து உண்டா? என்று பெரியோர் களை விசாரித்து வந்தனர். அந்தச் சமயம் ஒரு முஸ்லீம் பெரியோரைச் சந்தித்து வினவினார். அவர் தான் "காட்டுவா மஸ்தான்" சாகிப் என்பவர். நன்றாகப் படித்தவர். இதர மதங்களில் பேதமான அபிப்பிரா யம் கொள்ளாதவர். சிறந்த ஞான புருஷர். அப்பெரி யார் நமது பழநிசுவாமிக்கு இஸ்லாத்தின் கருத்துக் களையும் கோட்பாடுகளையும் ரத்ன சுருக்கமாக எடுத்து விளக்கி, மன அமைதி பெறுவதற்குரிய வழிகளையும் ஆராய்ந்து தெரிவித்தார்.

தாயுமானரடிகளின் மணிவாக்கு:—

சுமார் இரண்டு வருஷகாலம் இஸ்லாம் மத ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த போது, பலரும் பழநிசுவாமியை இஸ்லாம் மதத்தைச்சோந்தவர்போல் விளங்குகிறாரென்று பேசிக் கொள்வார்களாம்!

ஆனால், "சமய கோடிகளெல்லாம் தம் தெய்வம் எம்தெய்வமென்று எங்கும் தொடாந்து எதிர் வழக்கிட

வும் நின்றது எது?" என்ற தாயுமானரடிகளின் மணி வாக்கை உய்த்துணர்ந்த உத்தமரல்லவா? உண்மையில், பழநிசுவாமிக்கு இந்துமதப்பற்றும், அபிமானமும் அபாரம். அத்வைதத்தில் ரொம்பவும் தீவிரமான அசைக்க முடியாத கொள்கையுமுடையவர். யார் என்ன சொன்னாலும், எது எப்படி நேர்ந்தாலும் பழநி சுவாமிக்கு ஒரே ஒரு ராஜ பாதையுண்டு. அந்தப் பாதையைக் குறிக்கோளாகக் கொண்டார். அதனின்றும் பிறழமாட்டாரென்பது "விளையும்,பயிர் முளையிலிருந்தே தெரியும்" என்பது போல், நிதர்சனமாகக் கண்டு கொள்ளப்பட்டது.

கொழும்புப் பிரயாணம்

பழநிசுவாமிக்கு முஸ்லீம் நண்பர்கள் அதிகம். அப்போது 19 வயதிருக்கலாம். சில முஸ்லீம் நண்பர்கள் தங்களது தொழில் காரணமாகக் கொழும்புக்குப் பிரயாணமாயிருந்தனர். பழநிசுவாமிக்கு யாத்திரையில் நாட்டம் அதிகம். அவர்களோடு, பழநிசுவாமியும் கொழும்புப் பிரயாணமானார். கண்டியில் இருந்து மகாபலி கங்கைக்குப் போகும் வழியில், ஒரு முஸ்லீம் அன்பர் பங்களாவில் தங்க நேர்ந்தது. பழநிசுவாமியைக் கண்டதும், அவ்வூர் மக்கள் ஏதோ தம்மையும் அறியாத ஒரு பிரேமையைப் பழநிசுவாமியிடம் காட்டி, உள்ளன்புடன் நடந்து கொண்டார்கள்.

ஓர் அதிசய சம்பவம்.—

அப்பொழுது ஓர் அதிசய சம்பவம் நடந்தது. அச்சம்பவம் பழநிசுவாமியின் வாழ்க்கையில் மறக்க

முடியாத தொன்றும்? மேலும், புத்த பகவானுடைய "பல்" இருக்கும் மாளிகைக்குப் பெரியதொரு பட்டத்து யானையுண்டு. மகாபலி கங்கையில் முழுக்காடச் செய்ய, அந்த யானையை அழைத்துப் போவது வழக்கம். யானை நீரில் மூழ்கி தனது உடலைப் புரட்டிக் கொண்டிருந்தபோது, திடீரென்று அதற்கு மதம் பிடித்து விட்டது. யானை கட்டுக்கு அடங்கவில்லை. கரைக்கு ஓடியது. மாவுத்தன் அதனைக் அடக்கப் பல வழிகளிலும் முயன்றான். மாவுத்தனைக் கரையில் தூக்கி எறிந்து, அவனைக் காலால் இடறிக் கொன்றுவிட்டது. அதுவுமல்லாமல், பக்கத்தில் இருந்த பல மனிதர்களையும் மிதித்து விட்டு, இன்னும் பல சேதங்களையும் விளைத்தது. மெயின் ரோடுக்கு ஓடி வந்து, பல பஸ்களையும் தூக்கித் தள்ளிப் பல உயிர்ச் சேதங்களையும் உண்டு பண்ணியது. நகரில் அல்லோலகல்லோலம் ஏற்பட்டு விட்டது.

இராணுவப் போலீஸ் விஜயம்:—

பல ராணுவப் போலீஸ்காரர்கள் துப்பாக்கி சகிதம் ஓடி வந்தனர். யானையைச் சுட்டுக் கொல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. புத்த மடாலயத்திலிருந்து பல சாதுக்களும், பெரிய உத்தியோகஸ்தர்களும் இதனைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஏராளமான ஜனங்களும் மூலைக்கு மூலை ஓடிப்பதுங்கிப் பார்த்துக் கொண்டிருந்தனர். யானையின் அட்டகாசமோ சொல்ல முடியாததாக விருந்தது. போலீஸ்காரர்கள் யானையைக் குறிபார்த்துச் சுடுகிறசமயம்.

வாலிபன் பக்கத்தில் மதம் பிடித்த யானை :—

அந்த க்ஷணத்தில், ஒரு வாலிபன் பக்கத்துப் பங்களாவிலிருந்து, யானை மதம்பிடித்து ஓடிவரும் வழியில் நடு வீதியில் வந்து நின்றான். அவனுக்கு "ஏன் இவ்வளவு ஜனங்கள் கூடிக்கூக்குரல் போடுகிறார்கள்" என்று அறிய ஆவல் ஏற்பட்டது. யானைக்கு மதம் பிடித்த விஷயம் அவனுக்குத்தெரியாது. வாலிபனுக்குக் கடும் எச்சரிக்கையாக, "உள்ளே போ, உள்ளே போ, மதம் பிடித்த யானை உன்னை நோக்கி ஓடிவருகிறது" என்று ஜனங்கள் ஒரு பக்கம் கூக்குரலிட்டார்கள். மற்றொருபுறம், ராணுவ போலீஸாரும் வாலிபனை நோக்கிக் கடும் எச்சரிக்கை செய்தனர். புத்த பிக்ஷுக்களும் உத்தியோகஸ்தர்களும் "அநியாயமாக ஒரு வாலிபன் யானையால் மிதிப்பட்டு இறக்கப் போகிறான்" என்று அனுதாபத்துடன் கூவிக்கொண்டிருந்த போது, அந்த நிமிஷமே மதம் பிடித்த யானையும் வாலிபன் நிற்குமிடத்திற்குப் பத்து கஜ தூரத்தில் அட்டகாசத்துடன் ஓடி வந்தது. அந்த வாலிபனுக்கு ஒன்றும் புரியவில்லை. அந்த வாலிபன் யார்? அவர் தான் நமது சித்த புருஷர் பழநிசுவாமி.

மதம் பிடித்த யானையும் வணங்கியது :—

எல்லோரும் பிரமிக்கும்படியாக அந்த மதம் பிடித்த யானையும் பழநிசுவாமி நிற்குமிடம் வந்ததும் அவர் முன்பு திடீரென்று மண்டியிட்டு, பழநிசுவாமியின் சிரசில் தனது துதிக்கையை வைத்து, மூன்று தடவை பலத்த குரலில் பிளிறியது. பழநிசுவாமியும் யானையைத் தடவிக் கொடுத்ததும், யானை முன் போல்

அடங்கி நின்றது. கூடியிருந்த ஜனங்களும், புத்த பிக்ஷுக்களும், போலீசாரும் பேராச்சரியத்துடன் சந்தோஷப்பட்டு, பழநிசுவாமி நிற்குமிடத்துக்கு ஓடிவந்தார்கள். இவர் யாரோ ஒரு தெய்வாம்சம் பெற்ற புருஷராயிருக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால், மதம் பிடித்த யானை ஒரு நொடிப்பொழுதில் அடங்கி விடுமோ? என்றும் கூறி, பழநிசுவாமியைப் பாராட்டி, வணங்கி நின்றனர். பழநிசுவாமியும் எல்லோருக்கும் தைரியம்கூறி, அருகில்அழைத்து, யானைக்கு 'வாழைப் பழம் கொடுங்கள்' என்று சொல்ல, அது போல் யானைக்கும் ஏராளமான பழங்களும்,பச்சைப்புற்களும், தழைகளும் வழங்கப்பட்டன. யானையும் நல்ல சுபாவத்துடன் புத்தர் கோயிலுக்குப் போய்ச் சேர்ந்தது.

பழநிசுவாமிக்கு ஆசிகள் :—

புத்தபிக்ஷுக்களும், மௌல்விகளும், சிறந்த கிறிஸ்தவப் பாதிரிமார்களும் பழநிசுவாமியைத் தத்தம் இடங்களுக்கு அழைத்து வரவேற்பு அளித்துப்பாராட்டினர். புத்த பிக்ஷுக்கள் அவர்களுடைய வேத மோதி ஆசீர்வதித்தனர். பெரியோர்களனைவரும் பழநிசுவாமியைப் பார்த்து "நீங்கள் தெய்வ புருஷர். இன்று முதல் நீங்கள் உலகில் தெய்வ ஸ்வரூபமாக விளங்கப் போகிறீர்கள்" என்று ஆசிகள் வழங்கி, ரொம்பவும் மரியாதைகள் செலுத்தி, வழியனுப்பினர். இச்செய்தி காட்டுத்தீப்போல், கொழும்புவில் நகர்களெங்கும்பரவியது. யாரோ ஒரு தெய்வாம்சம் பெற்ற வாலிபர் இந்தியாவிலிருந்து வந்திருக்கிறரென்றும், மதம் பிடித்த யானை இவரைக் கண்டதும், வெறியடங்கி, நெருங்கி வந்து, மண்டிபோட்டு மரியாதை செலுத்திய

தென்றும், இந்தத் தெய்வாம்சம் பெற்ற செயலே புத்த பிக்ஷுக்களும், முஸ்லீம் பெரியோர்களும், கிறிஸ்துவ அறிஞர்களும் பாராட்டி வருகிறார்களென்றும் ஜனங்கள் ஆங்காங்குப் பேசிக்கொண்டார்கள். பத்திரிகை களிலும் செய்தி பிரசுரிக்கப்பெற்றது. பல நாட்கள் வரையில் ஜனங்கள் பழநிசுவாமியைப் பார்க்கத் தேர்க் கூட்டம் போல் திரண்டுவந்து, பழம் தேங்காயுடன் மரியாதைகள் செலுத்திக் கும்பிட்டு வணங்கி நின்றார்கள். "நானே சிறுவன், என்னை யாரும் விழுந்து வணங்கக் கூடாது" என்று பழநிசுவாமியும் அவர்களை வேண்டிக் கொண்டார்.

நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வரவேற்பு

இலங்கையில், தெய்வாம்சம் பெற்று விளங்கும் ஒரு தமிழ்நாட்டு ஸாதுவுக்குப் பல பெரியோர்க ளாலும் பல மதத்தினர்களாலும் இலங்கை மக்க ளாலும், வரவேற்பும், உபசாரங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், அங்கு வதியும் இந்துமதப் பற்றுள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் சும்மா இருப்பார்களா? தர்மத்திலும், தெய்வகாரியங்களிலும் ஈடுபடும் செட்டிமார்கள் பழநிசுவாமியை அன்புடன் வரவேற்று உபசரணைகள்செய்தனர். அவரதுதேவாம்ச செயல்களைக் கொண்டாடினர். இந்தச் சமயத்தில் இலங்கையில் கண்டியிலிருந்து சிவனடி பாத மென்ற பர்வதத்தின் மகிமையைப் பழநிசுவாமி கேட்டு மகிழ்ந்தனர். அதற்கு விஜயம் செய்ய வேண்டும் என்று ஆவலையும் கொண்டனர்.

ஒரு யாத்திரை பஸ் பேசப்பட்டது. ஒரு நாள் இரவு எட்டு மணிக்குத் தமது கோஷ்டியாருடன் மலையின் அடிவாரத்திற்குப் போய்ச் சேர்ந்தார். இரவானபடியால், அனைவரும் மலையடிவாரத்தில் ஒரு ஜாகையில் தங்கியிருந்தார்கள்.

சந்நியாசினியின் அழைப்பு :—

இரவு பன்னிரெண்டு மணி இருக்கும். ஒரு சந்நியாசினி ஜடாமுடி தாங்கி, கையில் கமண்டலத்துடன் நெருங்கி வந்து, "பழநிசுவாமி" "பழநிசுவாமி" எழுந்திரு. நாமிருவரும் சிவனடி பாதமிருக்கிற சிகரம் போய் தரிசித்துவருவோம். நான் சிவனடி பாதத்தைக் காண்பிக்கிறேன். உன் பின்னோடு வந்திருப்பவர்கள் தூங்கி எழுவதற்குள், நாம் விரைவில் போய்த் திரும்பி விடலாம். எழுந்திரு! தாமதம் செய்யாதே! எழுந்திரு" என்று அழைத்தார். "சூரியனுடைய உதயத்தை நீ மலைச்சிகரத்தில் அற்புதமாயும் ஆனந்தமாயும் கண்டு மகிழலாம். சிவனடி பாத தரிசனம் செய்து வருவோம். இந்தத் தரிசனத்தின் மூலம் உனக்குக் குருவின் அருளும் பலசித்திகளும் ஏற்படும்" என்று சொல்ல, பழநிசுவாமியும் தம்முடன் வந்துள்ள நண்பர்களை விட்டுப் பிரிய மனமில்லாது, சற்றுத் தயங்கினார். இதனைக் கவனித்த சந்நியாசினி "நாமிருவரும் மட்டும்தான் போக வேண்டும்; வேறு எவரும் வரக்கூடாது" என்று கூறவே, பழநிசுவாமியும், தமது அன்பர்களுக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு, சந்நியாசினியுடன் மலைச் சிகரம் போகலானார்.

வழியில் ஆச்சரியமான நிகழ்ச்சி :—

போகும் வழியில், ஒரு ஆச்சரியமான நிகழ்ச்சி ஏற்பட்டது. பழநிசுவாமி சிறுவயது முதல், களி மண்ணில் பராசக்தி உருவம் செய்து, பந்தல்கள் போட்டுக் குழந்தைகளை அழைத்து விளையாடுவது வழக்கம். பாதி வழி சென்றதும், அந்த ஸந்நியாசினி தமது கமண்டலத்திலிருந்து ஒரு பொம்மையை எடுத்துப் பழநி சுவாமிக்குக் காண்பித்தாள். அந்தப் பொம்மையைப் பார்த்ததும், "இஃதென்ன ஆச்சரியம்! நான் சிறுவயதில் குழந்தைகளுடன் விளையாடிய, பராசக்தி பொம்மை அல்லவா இது? உங்கள் கைக்கு எப்படி வந்தது?" என்று வினவ, அந்தப் புனிதவதியாரும் திருவாய் மலர்ந்து, "சிறுவயதில் குழந்தைகளுடன் நீ விளையாடிய பொம்மையும் நானும் ஒன்றுதான்" என்று கூறவே, பழநிசுவாமி மெய்ம்மறந்து, உணர்ச்சிப் பெருக்கால் புளகாங்கிதமடைந்து, சந்நியாசினியைப் பரதேவதையாகக் கருதிப் பிரார்த்தித்து நின்றார். அப்போது சந்நியாசினியும் பழநி சுவாமியைப் பார்த்து "குழந்தாய்! பரிபூரணமான எனது ஆசி உனக்கு இருக்கிறது. நீ உலகில் மக்களுக்கு நல்லுபதேசங்கள் செய்து, அவர்களை நிறை மனிதர்களாகச் செய்வாயாக.! சத்சங்கங்கள் கூட்டி உன்னை நாடி வரும் பக்தர்களுக்கு என்னை அடையும் வழிகளைக் காண்பிப்பாயாக! பாரத பூமியில் கர்நாடக தேசத்தில் உனது தொண்டு சிறப்பளிக்கட்டும்! நீ பாரத தேசத்தில் க்ஷேத்திராடனங்கள் செய்து, அப்படியே கைலாச யாத்திரையையும் முடித்து வா. உனக்குக் குரு கடாட்சமளிக்க ஒரு பிர்ம்மநிஷ்டாள் வடக்கே தவமிருக்கிறார்" என்று கூறியதும்.

அந்தச் சந்நியாசினி பிரகாசமான வடிவம் எடுத்து மறைந்து விட்டாள். பழநிசுவாமி சந்நியாசினியைக் காணுது மனம் ஏங்கி நின்ருர். பிறகு அன்னை ஸ்ரீராஜராஜேஸ்வரியை முழுமனதுடன் துதிசெய்தார்.

பாசம் விலகியது :—

பிறகு, மனத்தெளிவு பெற்ருர். அன்று முதல் பழநி சுவாமிக்கு மனதிலிருந்த குடும்பப் பாசம் விலகியது. ஆத்மஸ்வரூபம் பிரகாசிக்கலாயிற்று. மனதுக்குச் சாந்தி ஏற்பட்டது. "சரீரம்அழியக் கூடியது; அழிவில் லாத வஸ்துவுடன் கலக்க வேண்டும்" என்ற உணர்வு உண்டாயிற்று. மனதுக்கு எத்தனையோ நூல்கள் படித்த மாதிரி நினைவு ஏற்பட்டது. திடச்சித்தம் உண்டா யிற்று. ஏகாக்ர மனநிலை ஏற்பட்டது. சித்துகள் யாவும் "மித்யை" என்ற உண்மை புலனுயிற்று. "நாமே பராசக்தி சொரூபம்" என்ற எண்ணம் மனதில் திட மாக ஏற்பட்டது. இவ்வளவும் சிவனடிபாத பர்வதத்தில் ஏற்பட்ட அனுபவங்களே. இனி பாரத தேசம் செல்ல வேண்டும் என்று பழநிசுவாமியும் உறுதி கொண்டார்.

இந்தியா திரும்புதல் :—

பின்னர், பழநிசுவாமிக்கும் இந்தியாவுக்குப் புறப்படவேண்டுமென்ற சங்கல்பம் ஏற்பட்டது. அதன் படியே, பழநிசுவாமியும் இந்தியா வந்து, தாயார் உள் பட, அத்தனை உற்ருர் உறவினர்களையும் சந்தித்தார் கள். பின்னர் தாய் மாமனுன ஸ்ரீ துரைசாமி "நாயிக்" அவர்கள் வீட்டில், திருச்சி கண்டோன்மென் டில் சில நாள் வசித்தார்கள்.

வீட்டில் கலியாணப் பேச்சு :—

பழநிசுவாமிக்குக் கலியாணம் செய்து முடிப்ப தென்று வீட்டில் பேச்சுப் பேசப் பெற்றது. தக்க மூலதனத்தோடு ஒரு பெரிய வியாபாரமும் அவருக்குத் தயாராக இருக்கிறதென்பதும் தெரியவந்தது. பழநிசுவாமிக்கு இப்பேச்சுக்கள் சிறிதும் பிடிக்கவில்லை. வாழ்க்கையில் தாம் ஓர் உயர்ந்த லட்சியத்தை அடையப் பிறந்திருப்பதாகவும் ஸம்ஸார பந்தமெதுவும் கூடாதென்றும், பழநிசுவாமி, தன் தயாரிடமும், மற்ற நெருங்கிய உற்றார் உறவினர் களிடமும் கண்டிப்பாகக் கூறிவிட்டார். பழநிசுவாமி யின் திடமனதையும், உறுதியான பேச்சையும் உற வினர்கள் உணர்ந்தாலும், அவர்களின் மனம் அமைதி பெறாதிருந்து வந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில், பழநி சுவாமிக்கு வயது இருபது நிரம்பியது.

செட்டிமார் நாட்டுக்கு அழைப்பு:—

இலங்கையில், பழநிசுவாமியின் தெய்வாம்சச் செயல்களை நேரில் பார்த்தவர்களும் கேட்டவர்களும் அநேகர். அவர்களில், நாட்டுக் கோட்டைச் செட்டி மார்கள் அதிகம். பல செட்டியார் பிரமுகர்கள் திருச் சிக்கு வந்து பழநிசுவாமியைச் செட்டிமார் நாட்டுக்கு அன்புடன் அழைத்தார்கள். ஆத்மஞான நாட்டத்தி லிருந்த பழனிசுவாமியிடம் அம்பிகையின் நினைவும் அவளது அருளும் பிரகாசித்துக் கொண்டிருந்தன. நினைப்பதும், பேசுவதும், செய்வதும் ஞானமயமாக இருந்ததால், பழநிசுவாமியிடம் மக்களும் அறிஞர் களும் பேரன்பு கொண்டு பழகி வந்தார்கள். எவ்வளவு தான் ஸ்ரீ அன்னை ராஜ ராஜேஸ்வரியின் அனுக்கிரகம்

பெற்றிருந்தாலும், உலக வாழ்வில் ஒருவருக்கு ஞான குரு வேண்டுமல்லவா? அந்த ஞான குருவை நாடி எங்குப் போகலாமென்ற நினைவு அவரது மனதில் உறுத்திக் கொண்டிருந்தது. திடுதிப் பென்று "ஞான குருவை நாடி க்ஷேத்திராடனங்கள் செய்வது தான் உத்தமமான மார்க்கம்" என்று பழநிசுவாமியும் மன உறுதி செய்துகொண்டார். க்ஷேத்திராடன முடிவில் ஸ்ரீ கைலாச யாத்திரையையும் முடித்து வருவோ மென்று சங்கல்பித்துக் கொண்டதும் அவரது வாழ்வில் ஒரு திருப்பமாகும்.

பட்டமங்கலத்தில் கண்ட காட்சி :—

இந்தச் சந்தர்ப்பத்தில், செல்வமிக்க நாட்டுக் கோட்டை தனவணிக நகரத்தார்களின் அழைப்பையும் தட்ட முடியாமல், பழநிசுவாமியும் முதன் முதலாகச் செட்டிமார் நாட்டுக்கு விஜயம் செய்தனர். அவர் நேராகக் கோயிலூர் மடாலயம் சென்று, அங்கு ஆதி குருமூர்த்தி முத்துராமலிங்க தேசிகர் அவர்களின் சமாதியைத் தரிசித்து, அங்கேயே ஒரு மணி நேரத் திற்கு மேல், தியானத்தில் அமர்ந்திருந்தனர். கோயி லூர் மடாலயம் அத்வைத ஸம்பிரதாயத்தைக் கொண்ட தாதலால், ஸ்ரீபழநிசுவாமிக்கு அதில் பிடித்தம் அதிகம். பின்னர், ஒருநாள்பட்டமங்கலத்திலிருந்தபோது, முத்து ராமலிங்க தேசிக சுவாமிகள் கனவில் தரிசனம் கொடுத்து, "அப்பா! நான் எந்தப் பரதேவதையின் அனுக்கிரகத்தால், முக்தி நிலையை அடைந்தேனோ, அந்தப் பரதேவதை உன்னிடத்திலுமிருந்து வருகிறாள். ஆகவே, நீ மேன் மேலும் பூரண அத்வைத ஞானம் பெறவேண்டி, நீ பாரத பூமியிலுள்ள புண்ய க்ஷேத்தி

ரங்களுக்குச் சென்று தீர்த்தம், ஸ்தலம், மூர்த்தி முதலியவைகளை முறையாகத் தரிசித்துப் பின்னர் ஸ்ரீ கைலாச யாத்திரையையும் முடித்துத் திரும்பு· வடக்கே நேபாளத்தில் "குரு கடாட்சம்" சித்திக்கு மென்று கூறி, மறைந்தார். மெய்ஞ்ஞான மூர்த்தியின் வாக்கு வீண் போகாதல்லவா? அன்று முதல், பழநி சுவாமிக்கு ஞானகுருவை நாடிச்செல்ல, மனம் துடித்துக் கொண்டிருந்தது. சந்தர்ப்பம் ஏற்பட்ட போதெல்லாம் தம்மை நாடி வருவோர்களிடம் சத் விஷயமான பேச்சுக்களையே பேசி வந்தார்கள்.

ஞான தந்வந்திரியாக விளங்கினார் :—

அனைவரையும் பகவத் தியானத்தில் ஈடுபடும்படி அறிவுறுத்தி வருவது, அவரது சிறந்ததொரு குணமாகப் பிரகாசித்து வந்தது. மன நோயுற்றிருப்போர்க்கு ஞான தந்வந்திரியாகவுமிருந்து வந்தனர். துறவிகள் கூட்டத்திற்குத் தாயாக விளங்கினர். அவர்களின் சரீர உபாதைகளை நிவர்த்திக்க வழி தேடிக் கொடுப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தனர். செட்டிமார் நாட்டில் தங்கியிருந்த காலத்தில் பல கிராம தேவதைகளுக்குக் திருப்பணிகள் ஏற்பாட்டில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டனர். பல ஊர்களில் கும்பாபிஷேகங்களும், சுவாமிகள் முயற்சி கொண்டு செய்து வைக்கப்பெற்றன. பல அறப்பணிகளும் ஆற்றியுள்ளார்கள். பழநிசுவாமிகள் ஏற்பாடுகள் செய்த திருப்பணிகளும், அவர் ஆற்றிய அறப்பணிகளும் அடங்கிய விவர ஜாபிதா இந்நூலின் கடைசியில் சேர்க்கப் பெற்றிருக்கிறது.

"திருச்சி சுவாமிகள்" என்ற நாமகரணம் :—

இவ்வாறு மக்களுக்குப் பல உபயோகமான காரியங்களைச் செய்து கொடுத்து வந்ததால், பழநிசுவாமியை நகரத்தார் பூராவும் அன்பான உபசரிப்புடன் அபிமானித்து வந்தனர். சுவாமிகள் திருச்சியிலிருந்து வந்த காரணத்தால், பழநிசுவாமியை "திருச்சி சுவாமிகள்" என்று பேரபிமானத்துடனும் அழைக்கலானார்கள். இப்போது திருச்சி சுவாமிகள் என்ற பெயர் ஸ்திரமாக ஏற்பட்டுவிட்டது. திருச்சி சுவாமிகளென்றால் தான், மக்களும்உடனே தெரிந்து கொள்வார்கள். சிறு வயது முதல், பரதேவதையான ஸ்ரீராஜராஜேஸ்வரியைத் தினந்தோறும் பூஜைசெய்து,மனதை அப்பரதேவதையிடம் லயிக்கும்படி செய்து வருவதால் அதிலிருந்து பலரும் பழநிசுவாமியை ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சுவாமி என்றும் அழைப்பதுண்டு. சுவாமிகள் பிறந்த இடத்தை மறந்து, துறவித் தொண்டை மேற்கொண்டு, அதற்குரிய நியம நிஷ்டையுடன் இருந்து வருவது அவரது சிறப்புக் குணத்தைக் காண்பிக்கின்றது. சாதுக்கள் 'சத்குரு' என்று அழைக்கின்றார்கள்.

ஞான புருஷர்களின் சந்திப்பு:—

திருவண்ணமலை ஈசான்ய மடத்தில் அமர்ந்திருக்கும் ஸ்ரீலஸ்ரீ இராமநாத சுவாமிகள் அவர்களைத் தென்னகத்தில் அனைவரும் அறிவார்கள். அப்பெரியார் பழனிசுவாமிகள் என்ற திருச்சி சுவாமிகளைப் பார்ப்பதற்குத் தம்பு செட்டித் தெருவிலுள்ள ஓர் அபிமானி இல்லத்திற்கு விஜயம் செய்திருந்தார்கள். இருவரது சந்திப்பும் அவ்விடத்தில் தெய்வாம்சம் பெற்ற

சந்திப்பாகத் திகழ்ந்தது. இருவரும் பூஜிக்கத் தகுந்த ஸத்குரு ஆவார்கள். இருவரும் ஞான புருஷர்கள். ஸ்ரீலஸ்ரீ இராமநாத சுவாமிகள் அன்பும் ஞான உணர்வும் கொண்டு, திருச்சி சுவாமிகளை விசாரித்தார்கள். "அம்மாவாகிய நீயேஎனக்கும்அம்மா" என்று சொல்ல "அம்மாவும் குழந்தையுமாக இருப்போம்" என்று திருச்சி சுவாமிகள் திருவாய் மலர்ந்தருள, அந்த இடத்தில், அப்போது நிகழ்ந்த தெய்வ சாந்நித்தியம் பெற்ற புருஷர்களின் ஸம்பாஷணையை எவரும் மறக்க முடியாது. திருச்சி சுவாமிகளுக்கு அந்த சந்திப்பு முதல் திருவண்ணமலை ஈசான்யமடத்தில் ஏற்பட்டஅபிமானம் எல்லையற்றது. ஸ்ரீலஸ்ரீ இராமநாத சுவாமிகளும் திருச்சி சுவாமிகளும் நகமும் சதையும் போலவும், மலரும் மணமும் போலவும் ஞானப் பிரேமையுடன் இருந்து வருவது குறிப்பிடத் தக்கது.

திருவண்ணமலை அம்பாளின் திருத்தேர்:—

சில காலமாக, ஸ்ரீ உண்ணமுலை அம்பாளின் திருத்தேர் பழுதாயிருந்தது. பலரும் முயற்சி செய்தனர். காலம் வரவில்லை யென்று தான் சொல்லலாம். அது புதுப்பிக்கப் படாதிருந்தது. ஸ்ரீலஸ்ரீ இராமநாத சுவாமிகள் வந்து போன மறுவாரமே, திருச்சி சுவாமிகளுக்கு என்னவோ மனது அமைதிக் குறைவாக இருந்தது. ஓர் நாளிரவு அம்பாளுக்குத் தேர் செய்யப்படவில்லை யென்ற கவலையும் சுவாமிகளை மிகவும் உறுத்தியது. ஒரு நள்ளிரவில் "என்ன தூங்குகிறாய் ? எழுந்திரு. எனது தேரைப் பழுதுபார்த்து, என்னைத் தேரில் காட்சி கண்டு களிப்பாய். உனது தபோ நிலையையும் உயர்த்திக் கொள்வாய்" என்று

ஸ்ரீ உண்ணமுலை அம்பாளும் திருச்சி சுவாமிகளைத் தட்டி எழுப்ப, ஸ்ரீ சுவாமிகள் எழுந்து உட்கார்ந்ததும் ஒருவரையும் காணாது, மனம் வருந்தி இருந்தார். திருச்சி சுவாமிகளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. உடனே திருவண்ணாமலைக்குப் பயண மானார்கள். அம்பாளை மனம் குளிரத் தரிசினம் செய்தார்கள். அம் பாளின் தேரைப் புதுப்பிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யப் பல மெய்யன்பர்களுடன் கலந்து பேசினார்கள், ஸ்ரீலஸ்ரீ இராமநாத சுவாமிகள் இந்த கைங்கரியத்தில் எடுத்துக்கொண்ட முயற்சி அபாரமானது. இந்தத் தர்ம கைங்கரியத்தில். மக்களின் உழைப்பும் பிரமாதமாக இருந்தது. ஒரு வருட காலத்துக்குள், திட்டமிட்டபடி ரதவேலையும் பூர்த்தியாகி, அம்பாளும் ரதத்தில் வீதிவலம் வந்து மக்களுக்குத் தரிசினம் தந்த காட்சி அற்புதமாக இருந்ததென்று யாவரும் எங்கும் பேசிக் கொண்டார்கள். இந்தப் புனித கைங்கரியம் மூலமாக திருச்சி சுவாமிகளிடம் மக்கள் பக்தியும் அபி மானமும் கொண்டு பழகலானார்கள்.

திருச்சி சுவாமிகளிடம் மக்களின் பக்தி:—

திருவண்ணாமலையில் அம்பாளின் தேர் கைங் கரியம் பூர்த்தியான பிறகு, மக்களின் பக்தியை முன் னிட்டுத் திருச்சி சுவாமிகளும் சில காலம் அங்கேயே தங்கவேண்டியிருந்தது. தம்மை நாடிவரும் பக்தர் களுக்கு நல்லறங்களைப் போதிப்பதில் இணையற்ற ஞான புருஷராக விளங்கினார். அன்றுடம் கர்மா, பக்தி, ஞானம் முதலிய மார்க்கங்களை அவரவர்களின் மனோ நிலைக்குத் தக்கவாறு உபதேசித்து வந்தனர். ஸ்திரீ களுக்கு இல்லற தர்மங்களைப் போதிப்பதோடு, மாண

வர் மாணவிகள் நல்லொழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதையும் அறிவுறுத்தி வந்தனர்.

இந்நாளில், சுவாமிகளுக்குக் கைலாச யாத்திரையிலேயே துடிப்பும் ஆர்வமுமிருந்து வந்ததால், அதை ஒருவருடத்தில் முடித்துத் திரும்பவேண்டு மென்று அப்போது முடிவு கொண்டார். இந்த முடிவைக் குறிக்கோளாகக் கொண்டு, திருச்சி சுவாமிகளும் செட்டியார் பிரமுகர்களின் அழைப்பின் பேரில் மீண்டும் செட்டிமார் நாடு விஜயம் செய்து, காரைக்குடியிலிருந்து மங்களகரமாகப் புறப்பட்டு, பாரத தேசத்திலுள்ள புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசனம் செய்த பின்னர், ஸ்ரீகாசி க்ஷேத்திரம் சென்று, அங்கு ஸ்ரீ அம்பிகையின் அனுக்கிரகத்தால் நேபாளம் போய் அங்கு "ஸ்ரீ சிவபுரி மகராஜ்" என்ற ஞான புருஷரைச் சந்தித்து, அவரிடம் ஞான உபதேசம் பெற்றுத் திரும்பிய வரலாற்றை 9, 10, 11-ம் பக்கங்களில் விரிவாகப் படித்து நேயர்கள் இன்புறலாம்.

மூன்று மஹாசித்திகள்

திருச்சி சுவாமிகள் என்றழைக்கப் பெறுகிற பிரம்ம நிஷ்டாள் எத்தனையோ சித்திகளைப் பெற்றிருந்தாலும், அவைகளில் மூன்று மகாசித்திகள் முக்கியமாகக் குறிப்பிடக் கூடியவை. ஒன்று வாக்சித்தி. இதன் மகிமை செப்பக் கூடியதன்று. வாக்சித்தி பெற்றவர்களை மகான்களென்றுதான் அழைப்பார்கள். ஒருவனுக்கு என்ன கஷ்டங்கள் நேர்ந்தாலும், வாக்

சித்தி பெற்ற புருஷர்கள் "உன் கஷ்டங்கள் தீர்ந்து விடும்" என்று சொன்னால், அக்கஷ்டங்கள் சூரியனைக் கண்ட பனிபோல் அறவே நீங்கப் பெறுவதைப் பார்த்திருக்கிறோம். பிரம்ம நிஷ்டாளின் வாக் சித்தி மகாசக்தி வாய்ந்தது. பக்தர்களுக்கு வாக்கினால் எது சொன்னாலும், அது பூரணமாக அவரவர்களுக்குப் பலித்து வருகிறது. பக்தர்களும் திருப்தியடைந்து பிரம்ம நிஷ்டாளின் அனுக்கிரக ஆசீர்வாதத்துக்கு எதிர் நோக்கியிருக்கிறார்கள்.

இரண்டாவது ஹஸ்த சித்தி :—

இந்த ஸித்தி பிரம்ம நிஷ்டாளிடம் நிறைந்திருக்கிறது. பக்தர்களுக்கு எதைத் தொட்டுக் கொடுத்தாலும் அதிலுள்ள தோஷங்களனைத்தும் நிவர்த்தியாகி, அவர்களுக்குப் பரம சௌக்கியம் ஏற்படுகிறது. இளைத்த குழந்தைகள், ரோகஸ்தர்கள் பெரிதும் அனுகூலமடைந்து வருகின்றார்கள். தன தான்ய சம்பத்துக்களும், புத்திரசந்தானங்களும் பக்தர்களுக்கு ஏற்பட்டு வருகின்றன. இவை கண் கூடாகப் பார்த்து வரும் விஷயங்களாகும்.

மூன்றாவது திருஷ்டி சித்தி:—

ஆத்ம ஞானம் அடைய விரும்புவோர் பிரம்ம நிஷ்டாளின் அனுக்கிரக திருஷ்டி சித்தி மூலம் நன்மையடைந்து வருகின்றார்கள். பக்தர்களுக்கு அஞ்ஞானம் விலகி, அவர்களுடைய அந்தக் கரணம் சுத்தியடைகிறது. இது மூலம் பக்தர்களுக்கு அத்வைத ஞானமேற்படுகிறது. மக்களுக்கு அத்வைத ஞானத்தைப் புகட்டவேண்டுமென்பது சுவாமிகள் கருத்து. பிரம்ம

சாட்சாத் காரத்தை அடையும்படி உபதேசம் செய்து வருவதையும், சுவாமிகள் தமது முக்கிய பணியாகக் கொண்டிருப்பதை விசேஷமாகப் பார்க்கலாம்.

"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம்" என்பது திருமூலரின் வாக்கு. இதுவே இம்மகானுபவரின் முக்கிய குறிக்கோளாகவுமிருந்து வருகிறது. மேலும், "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே" என்ற தாயுமானவரின் கொள்கையும் இவரது கொள்கையாக இருக்கின்றதென்று கூறினால், அது மிகைபடக் கூறியது ஆகாது.

பக்தர்கள் அபிப்பிராயம் :—

ஸ்ரீ திருச்சி சுவாமிகள் என்ற பிரம்ம நிஷ்டாள் எப்போதும் ஆரூட ஸ்திதிக்கும் மேலாக துரியாவஸ்தையில் சச்சிதானந்த ஸ்வரூபமாக இருந்து வருகின்றார்களென்று பல சாதுக்களும் கூறுவதைக் கேட்டிருக்கிறேன். சுவாமிகளுடைய திருஷ்டியில் ஜாதிபேதம் கிடையாது. அரசனும் ஒன்று; பரம ஏழையுமொன்று. இத்தகைய ஸமத்வ திருஷ்டி சுவாமிகளிடம் இயல்பாகவே இருந்து வருகிறது. பட்சி ஜாதிகளும் ஏதோ சுவாமிகளிடம் பேச இருப்பது போல், அவரது பக்கலில் வந்து உட்கார்ந்து, முகம் நோக்கி விட்டுப் பறந்து போகின்றன.

கன்னட தேசத்தில், பெங்களூர் அருகில், கெஞ்சனஹள்ளியில் ஸ்ரீகைலாச ஆசிரமத்தில் இருந்து அருளாட்சி செய்து, மனிதவர்க்கத்தைக் கடைத்தேற்றிக் கொண்டிருக்கும் பராசக்தியின் அனுக்கிரகம் பெற்

றுள்ள ஸ்ரீ திருச்சி சுவாமிகள் அவர்களின் அருமை பெருமைகளைச் சொல்லச் சொல்ல, எழுத எழுத ஆனந்தம் தான். சுவாமிகளின் வரலாற்றை எழுத நேர்ந்தது அடியேனுடைய பெரும் பேறுகும். ஒரு முறை திருச்சி சுவாமிகளைப் பார்த்துவிட்டு வந்தால், பன் முறையும் சுவாமிகளைப் பார்த்து, அவர்களின் அனுக்கிரகத்தைப் பெறுவதற்கு ஆவல் உண்டாகும். ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் அருளால் திருச்சி சுவாமிகள் நாமம் வாழ்க! சுபம்! சுபம்! சுபம்!

ஸ்ரீ திருச்சி சுவாமிகள் அவர்களின் கைலாச யாத்திரை

ஏவிளம்பி வருஷம் தைமாதம் 14-ந் தேதி நல்ல வேளையில் திருச்சி சுவாமிகளும் தமது 29-வது வயதில் சிஷ்யர்களுடன், கைலாச யாத்திரையாகக் காரைக்குடியிலிருந்து புறப்பட்டார்கள். பல நூற்றுக் கணக்கான சிஷ்யர்களும், சுகமே திரும்பி வரப் பிரார்த்தித்தார்கள். அன்று காரைக்குடி ரயில்வே ஸ்டேஷன் பெரிய திருவிழா ஸ்தலமாக விளங்கியது.

ரயிலேறியதும், பூமாரிகள் சொரிந்தன. வண்டி புறப்பட்டதும் ஜெய கோஷங்களும், ஆரவாரமும் வானளாவின. மறுநாள் சென்னை சேர்ந்ததும் சுவாமிகளுக்கு வரவேற்பு காத்திருந்தது. சென்னையில் ஒரு வாரம் தங்கி, யாத்திரைக்கு வேண்டிய சாமான்களைச் சேகரித்துக் கொண்டு தைமீ 20-ந் தேதி ஆந்திர தேசத்திலுள்ள ஓங்கோலுக்கு விஜயமானுர்கள்.

டி ஸ்தலத்தில் சந்நியாசினி ஸ்ரீமரகதமாயி அவர்களால் சுவாமிகளுக்குப் பாத பூஜை செய்து வைக்கப் பெற்றது. அங்கு ஒரு நாள் தங்கி ஸ்தல மூர்த்திகளைத் தரிசனம் செய்து விட்டு, 22-ந் தேதி பெஜவாடா விஜயமானார்கள்.

பெஜவாடா விஜயம்—மங்களகிரி ஸ்ரீ நரசிம்மமூர்த்தி தரிசனம்:—

பெஜவாடாவிலுள்ள கனக துர்க்கையின் கீர்த்தியும் விசேஷமானதால், சுவாமிகளும் விதிவத்தாக கிருஷ்ணா நதியில் ஸ்நானம் செய்துவிட்டு, அம்மனைத் தரிசனம் செய்த பின்னர், அங்குள்ள ஸ்ரீ மல்லிகேஸ்வர சுவாமி, அம்பாள் இன்னும் பல க்ஷேத்திர மூர்த்திகளையும் தரிசனம் செய்து கொண்டனர். மறுநாள் அங்கிருந்து, முப்பது மைல் தூரத்திலுள்ள மங்களகிரி ஸ்ரீ நரசிம்ம மூர்த்தியை ஸேவித்துப் பானக பூஜையும் நடத்தினார்கள். நேரில் தரிசனம் செய்தவர்களுக்கே இம்மூர்த்தியின் விசேஷம் தெரியவரும். பக்தர்களுக்குக் கேட்கும் வரங்களை அளிக்கக் கூடிய மூர்த்தியானதால், நாள் தோறும் ஏராளமான யாத்திரிகர்கள் வந்து போய்க் கொண்டிருப்பது கண் கொள்ளாக் காட்சியாகத் திகழ்கின்றது.

கோதாவரி ஸ்நானமும்—கோடிலிங்க க்ஷேத்திர தரிசனமும்:—

பழையபடி, பெஜவாடா திரும்பி, தை மீ 27-ந் தேதி புறப்பட்டு, ராஜமகேந்திரபுரம் சேர்ந்தார்கள். மக்களின் பாவங்களைப் போக்கும் புனித கோதாவரியில்

முறைப்படி நீராடிய பின்னர், கோடிலிங்க க்ஷேத்திர தரிசனமும் செய்யப்பட்டது. அங்கு ஒரு நாள் தங்கிய பின்னர், ஒரிஸா மாகாணத்திலுள்ள பூரி ஜெகந்நாதம் 29-ந் தேதி விஜயமாகி, அந்த க்ஷேத்திரத்தில் மூன்று தினங்கள் தங்கினார்கள். சமுத்திர ஸ்நானம், க்ஷேத்திர தரிசனம், இன்னும் பல விசேஷமான இடங்களுக்கு விஜயம் எல்லாம் செய்து கொள்ளப்பட்டன.

ஸ்ரீ சாட்சி கோபால் மூர்த்தி தரிசனம்:—

ஏவிளம்பி வருஷம் மாசி மாதம் முதல் தேதி பஸ் மார்க்கமாக ஸ்ரீ சாட்சி கோபால் க்ஷேத்திரம் சென்று அங்கு மூர்த்தி தரிசனமும் இதர பரிவாராதிகளின் தரிசனமும் செய்து கொள்ளப்பட்டன. பின்னர், புவனேஸ்வரர் தரிசனமும் செய்துகொண்டு, கட்டாக் நகரம் விஜயமாகி, அங்கிருந்து நேராக, கல்கத்தா பிரயாணமானார்கள்.

கல்கத்தா விஜயம்:—

கல்கத்தா நகரமும் சரித்திர சம்பந்தமானது. அது போல் அங்குள்ள ஸ்ரீகாளிகா மூர்த்திகளும் சாந்நித்தியம் பெற்றவை. காளி காட்டிலுள்ள ஸ்ரீ காளி தரிசனம் செய்த பின்னர், தட்சணேஸ்வரம் சென்று அங்கும் அம்பிகையைத் தரிசனம் செய்து, பிரசாதம் பெற்றுக்கொண்டனர். ஸ்ரீராமகிருஷ்ண மடம் முதலிய விசேஷ ஸ்தலங்களைப் பார்த்து அகமகிழ்ந்து, அங்கிருந்து தாடகேஸ்வரம் சென்று அங்குக் கோயில் கொண்டு விளங்கும் ஸ்ரீ தாடகேஸ்வரரைத் தரிசித்து விட்டு, மீண்டும் கல்கத்தா திரும்பி அங்கிருந்து சிவராத்திரிக்குத் தமது சிஷ்யர்களுடன் ஸ்ரீகாசிமா நகரம் வந்து சேர்ந்தார்கள்.

ஸ்ரீகாசி க்ஷேத்திர விஜயம்:—

மக்களுக்கு மோட்சத்தை அளிக்கும் ஸ்ரீகாசியில் மூன்று மாதங்கள் வாசம் செய்தார்கள். இங்கிருந்து பக்கலிலுள்ள க்ஷேத்திரங்களுக்குப் போவதும் திரும்புவதுமாக இருந்தார்கள். ஸ்ரீசுவாமிகளுக்கு இங்குப் பல தபோதனர்களின் ஸம்பந்தம் ஏற்பட்டது. சில அத்வைத ஞானிகளின் நெருங்கிய தொடர்பும் கிட்டியது. ஸ்ரீகாசியில் 64 காட்டுக்களில் முறைப்படி ஸ்நானம் செய்த பின்னர், ஸ்ரீகாசி விசுவேசர், ஸ்ரீ அன்ன பூரணி, ஸ்ரீ விசாலாட்சி, ஸ்ரீ துண்டி விநாயகர், காலபைரவர், வங்தேன் காசி, ஸ்ரீவேணி மாதவர், ஸ்ரீகேதாரேஸ்வரர், ஆதிகங்கை, ஸ்ரீவியாஸ காசி, ராம் நகர், ஸ்ரீலலிதாம்பிகை அம்பாள், நித்திய யாத்திரை, பஞ்சகோச யாத்திரை முதலியவைகளின் தரிசனங்கள் விதிவத்தாகவும், சாவதானத்துடனும் அரும் பெரும் சிரத்தையுடனும் செய்யப்பட்டன. சுவாமிகளின் ஆத்ம ஞான அனுபவத்தைக் கண்டு பல தபஸ்விகளும் கொண்டாடினார்களென்று சொல்லலாம். பின்னர், பஞ்சகோச யாத்திரை செய்யும் போது, ஸ்ரீ கருதமேஸ்வரர் தரிசனமும் செய்து கொள்ளப்பட்டது. மேலும் பீமகண்டேஸ்வரர், ராமேஸ்வரர், ராமேஸ்வரம், பாண்டகேஸ்வரம், தாரகேஸ்வரம் முதலிய ஸ்தலங்களுக்கு விஜயமாகி, மூர்த்திகளைத் தரிசனம் செய்து கொண்ட பிறகு, திரும்பவும் ஸ்ரீகாசி வந்து, மீண்டும் மார்க்கண்டேஸ்வரர் தரிசனம் செய்து கொண்டு கோமுகிநதி ஸ்நானமும் செய்து கொள்ளப்பட்டது.

விந்தியாசலத்தில் அஷ்டபுஜங்கி தரிசனம்:—

ஸ்ரீ சுவாமிகளும் சிஷ்யர்களுடன் காசியிலிருந்து புறப்பட்டு விந்தியாசலத்தில் கோயில் கொண்டுள்ள ஜகன்மாதாவாகிய அஷ்டபுஜங்கி அம்மனைத் தரிசித்து புளகாங்கிதமாகி, கங்கையில் நீராடிப் பேரானந்தம் கொண்டார்கள். மீண்டும் ஸ்ரீகாசியை அடைந்து, அங்கிருந்து அலகபாத் நகரம் விஜயமானார்கள்.

அலகபாத் விஜயம்—நைமி சாரண்ய தரிசனம்:—

ஸ்ரீகாசியிலிருந்து பிரயாணமாகி, அலகபாத் சேர்ந்தார்கள். அங்கு, திரிவேணி சங்கம ஸ்நானம், செய்யப்பட்டது. பரத்வாஜா ஆசிரமம், வல்லபாச்சாரி பீடம் இன்னும் பல விசேஷ ஸ்தலங்களைப் பார்த்து விட்டு, நைமிசாரண்ய தரிசனம் செய்து கொண்டார்கள். அங்கு ஸ்ரீ வியாச பீடதரிசனம், சங்கர தீர்த்த ஸ்நானம், கோமுகி நதி ஸ்நானமும் செய்து கொள்ளப்பட்டன. பின்னர் ஸ்ரீலலிதா பரமேஸ்வரி தரிசனம், புராண ரிஷிகளுடைய பர்ணசாலை தரிசனம் ஆகியவைகளை முடித்துக்கொண்டு ஸ்ரீராம நவமிக்கு அயோத்தியா வந்து சேர்ந்தார்கள்.

அயோத்தியில் சரயு நதி ஸ்நானம்:—

இங்கு சரயுநதி ஸ்நானத்தை முடித்துக்கொண்டு, ஸ்ரீ இராமச்சந்திர பிரபுவின் அவதார ஸ்தல தரிசனம், இன்னும் பல புண்ணிய மடங்கள் தரிசனம், நந்திக் கிராம தரிசனம் முதலியவைகளைப் பக்திச் சிரத்தை யுடன் முடித்துக்கொண்டு, திரும்பவும் காசி க்ஷேத்திரம் வந்து சேர்ந்தார்கள்.

கயா விஜயம்

பின்னர், சுவாமிகள் கயை சென்று அங்கு பல்குனி நதியில் ஸ்நானம் செய்து விட்டு, விஷ்ணு பாத தரிசனமும், செய்தனர். விஷ்ணு பாதத்திற்கு ஸகஸ்ரநாம அர்ச்சனையும் செய்யப்பட்டது. மேலும், அங்கு அக்ஷய வடதரிசனம் செய்தபின்னர், அங்குள்ள ஸ்ரீமங்கள கௌரியை தரிசனம் செய்தார்கள். புத்த கயா சென்று, புத்த பகவான் தரிசனமான பிறகு, அவர் தபஸ் செய்த இடம், போதி விருக்ஷம், புத்த மடாலயங்கள் தரிசனங்களும் செய்து கொள்ளப்பட்டன. பழையபடி கயா வந்து, வைத்திய நாதம் சென்று அப்பிரபல மூர்த்தியையும், தட்சிண காளியையும், ஷிபார்வதி தேவியையும் தரிசித்த பிறகு, சுவாமிகள் பாட்ளு நகரம் வந்து சேர்ந்தார்கள்.

ஹரித்வார் விஜயம்:—

ஸ்ரீசுவாமிகள் தமது சிஷ்யர்களுடன் மீண்டும் பாட்ளுவிலிருந்து காசிபம்பதி அடைந்து அங்கிருந்து புறப்பட்டு ஹரித்வார் க்ஷேத்திரம் வந்து சேர்ந்தார்கள். ஹரித்வாரத்தில் 15 தினங்கள் தங்கினார்கள். கங்கையில் பிரம்ம குண்ட ஸ்நானம், ஸப்த ரிஷி ஆசிரம தரிசனம், தக்ஷிண குண்டம், மாயாதேவி தரிசனம் முதலியவைகளை முறைப்படி முடித்துக்கொண்டு ரிஷிகேசம் சென்று அங்குச் சில நாட்கள் தங்கினார்கள். அங்கு அநேக ஆசிரமங்கள் தரிசன பாக்கியமும் கிடைத்தது. பின்னர், லட்சுமண ஜூலா சென்று, அங்குப் பார்க்கவேண்டிய இடங்களைப் பார்த்து விட்டு ரிஷி கேசத்திலிருந்து, ருத்ரப் பிரயாகை,கேதார நாதம் விஜயமாகி அங்குள்ள மூர்த்திகளைத் தரிசனம் செய்த

பின்னர், பிப்ல கோட் மார்க்கமாக பத்ரி நாதம் வந்தார்கள். இங்கு ஸ்ரீமன்நாராயணன் தரிசனம் முக்கியமானதாகும். இன்னும் பல இடங்களைக் கண்டு, அக மகிழ்ந்து மீண்டும் பிப்ல கோட் மார்க்கமாக, ருத்திர பிரயாகை வந்து சேர்ந்தார்கள். பிறகு ரிஷிகேசம், ஹரித்துவார் வந்து மகா பாரத யுத்த களமான குருக்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். பாரத யுத்தம் நடந்த இடத்தைத் தரிசனம் செய்த பின்னர், அங்குள்ள சூரிய தீர்த்தத்தில் ஸ்நானத்தை விதிவத்தாக முடித்துக் கொண்டார்கள்.

டில்லி விஜயம்:—

பின்பு, ஸ்ரீசுவாமிகள் குருக்ஷேத்திரத்திலிருந்து இந்தியாவின் தலை நகரான டில்லி விஜயம் செய்தார்கள். டில்லி யமுனை நதி ஸ்நானத்தை முடித்துக் கொண்டு, செங்கோட்டை, குட்பிமினார், ராஜகாட், ஜும்மா மசூதி இன்னும் பல விசேஷ காட்சிகளைப் பார்த்த பின்னர், ஆக்ரா சென்று தாஜ்மகால் கட்டிட அழகைக் கண்டு களித்தார்கள். பிறகு ஸ்ரீகிருஷ்ணனுக்குப் பிரியமான இடமாகிய மதுரா நகரம் வந்தடைந்து ஸ்ரீகிருஷ்ண க்ஷேத்திர தரிசனம், கோகுலம், ஸ்ரீகிருஷ்ணன் பாலியத்தில் விளையாடிய இடங்கள், கோகுலத்திலுள்ள ஸ்ரீபாலகிருஷ்ண க்ஷேத்திரம், ஸ்ரீரங்கஜீ கோயில் மற்றுமுள்ள இடங்களைப் பார்த்துவிட்டு, டில்லி நகரம் மீண்டும் வந்து சேர்ந்தார்கள்.

ஞான குருவின் தோற்றம்:—

சுவாமிகள் டில்லியிலிருந்த போது திரும்பவும் ஸ்ரீகாசி க்ஷேத்திரம் செல்லத் தன்னை யறியாமல் ஓர் உணர்ச்சி உண்டாகியது. ஏதோ ஸ்ரீ காசியில்

தரிசனம் செய்வதற்குப் பாக்கி யிருப்பதாக தோற்ற மேற்பட்டது. இத்துடன் ஸ்ரீ விசாலாட்சி ஸ்ரீவிச்வேசர் தியானஉருவம் மனத்தின் முன்வந்து நின்றது. உடனே டில்லியிலிருந்து புறப்பட்டு ஸ்ரீகாசியை அடைந்து ஸ்ரீகாசி விசாலாட்சியம்மனை நாள்தோறும் தரிசித்து வந்த நாளில், சில அத்வைத ஞானமூர்த்திகளின் உரை யாடலும், ஸம்வாதமும் மனத்தில் முதிர்ந்து நின்றன. ஓர் இரவு சுவாமிகளுக்கு மன அமைதி இல்லா திருந்தது. மனத்தில் ஒரு ஞான குரு தோன்றி மறை வதுபோலும், ஞான அலை வந்து மனத்தில் மோதுவது போலும் தோற்ற மேற்பட்டன. ஸ்ரீசுவாமிகள் விழித் துக்கொண்டு, சிந்தனை செய்யலானார்கள். இந்தச் சமயத்தில் தான் சுவாமிகளுக்கு துரியாவஸ்தையில் அசரீரி ஏற்பட்டு, அம்பிகையின் அனுக்கிரகத்தால் காசியிலிருந்து பாட்னா அடைந்து, பாட்னாவிலிருந்து ஆகாய மார்க்கமாக நேபாளம் சென்று, ஞான குரு ஸ்ரீ சிவபுரி மகாராஜரை அடைந்த வரலாறு முன் பக்கங்களில் விவரிக்கப் பெற்றிருக்கிறது.

ஸ்ரீகுகாம்பிகையின் அனுக்கிரகம்:—

நேபாளத்தில் வாக்மதி நதி ஸ்நானம் ரொம் பவும் விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது. அப் புனித நதியில் நீராடிய பின்னர், ஸ்ரீகுகாம்பிகை-ஸ்ரீ நீலகண்டேச்வரரைத் தரிசனம் செய்தனர். இந்த ஸ்த லத்தில் சுவாமிகள் ஆனந்த மயமாக விளங்கி நின்றார் கள். மேன்மேலும், ஸ்ரீ குகாம்பிகையின் அனுக்கிரக விசேஷத்தை உணர்ந்து மகிழ்ந்தார்கள். தலைநக ரான காட்மாண்டுவுக்கு விஜயமாகி, அங்கு விஷ்ணு கங்கை, ருத்ரகங்கையில் நீராடியதும் காலபைரவர்

தரிசனம் புத்தர் க்ஷேத்திர கோயில் தரிசனம் முதலியவைகளையும் ஒன்றுவிடாமல் பார்த்துவிட்டுச் சுவாமிகள் ஆகாய மார்க்கமாகப் பாட்னு நகரம் வந்திறங்கினார்கள்.

ஸ்ரீகைலாச யாத்திரை ஆரம்பம்:—

அடுத்தபடியாக, கைலாச யாத்திரையை விரைவில் முடிக்க வேண்டுமென்று தீர்மானம் ஏற்பட்டதும், இந்தியாவின் தலைநகரான டில்லி சேர்ந்து சில அதிகாரிகளையும், விசேஷ இடங்களையும் பார்த்துவிட்டு, டில்லியிலிருந்து பிரிலி நகரம் சென்று அங்கிருந்து காட்டுக்குதாம் வந்தடைந்தார்கள். இங்கிருந்துதான் சுவாமிகளின் கைலாச யாத்திரை ஆரம்பமாகியது. கைலாச பர்வதத்தையும், மானஸரோவர் ஏரியையும் தரிசிக்கச் செல்ல வேண்டுமானால், 12 பாதைகளிருக்கின்றன. பலரும் சொல்லி, அனுபவமான ராஜபாதை யென்று கேள்விப்பட்டதால் சுவாமிகளும் இங்கிருந்து ரயில் மார்க்கமாக, பஸ் மார்க்கமாக அல்மோரா வந்து சேர்ந்தார்கள்.

அல்மோராவில் கைலாச யாத்திரைக்குச்

சாமான்களைச் சேகரித்தல்:—

அல்மோராவிலிருந்து லிபுலேக் கணவாய் வழியாக கைலாச பர்வத அடிவாரத்திற்கு 238 மைல் கடக்க வேண்டும். இந்த அல்மோரா வழிதான் பந்தோபஸ்தான வழியென்று அனைவரும் அங்குக் கூறுவார்கள். ஆகையால் சுவாமிகள் தமக்கும் தமது சிஷ்யர்களுக்குமாக வேண்டிய சாமான்களையும் சாதனங்களையும் சேகரித்துக் கொண்டு தாங்கள் புறப்படுகிற

தினத்தை அதிகாரிகளுக்கும் தெரிவிக்கவே, அவர்களும் வேண்டிய உதவிகளைச் செய்து கொடுத்தார்கள். மூன்று தினங்கள் அங்கு தங்கியிருந்தார்கள். அல்மோராவிலிருந்து பஸ் மார்க்கமாகப் பாவகேஸ்வரம் சென்று, அன்றிரவு அந்தவிடத்தில் தங்கினார்கள். பிறகு அதிலிருந்து மறுநாட் காலை பஸ்மார்க்கமாகச் சௌக்கடி என்னும் ஸ்தலம் வந்து சேர்ந்தார்கள் இங்கிருந்துதான் கால் நடையாத்தை ஆரம்பமாகிறது. தால் என்னும் ஊரில் இரவு தங்கி மறுநாட் காலை ஆஸ்கோட், பலவாகோட், டார்ஜூலா, கேலா முதலிய ஊர்கள் வழியாக நடந்தும் பக்கத்துணையுடன் பிரயாணம் செய்தார்கள். மனோதைரிய மிருந்தால்தான், கைலாய யாத்திரையை ஆரம்பிக்க முடியுமென்று மக்களுக்கு நினைவு ஏற்படும்.

ஸ்ரீ நாராயண ஆசிரமம் சேர்தல்:—

பின்னர், கேலாவிலிருந்து மால்புவா சிறக்குச் சிறுவம் சென்றதும், ஸ்ரீ நாராயண ஆசிரமம் சேர்ந்தார்கள். அங்கு தங்கி, புத்திகர்ப்பே காலாபாணி லிப்லேக் கணவாய் வழியாக, தக்ளாகோட் சென்றதும் இரண்டு மூன்று நாள் அங்கு தங்கிவிட்டு, ரக்ஷாஸ்தால் அல்லது ராவண ஹிருதயமென்று சொல்லப்படும் இடத்தில் தங்கி பல மாலைக் காட்சிகளையும் மானஸரோவர் ஏரியையும் தரிசனத்தையும் கண்டு களித்து, பிறகு கைலாச பர்வதம் சென்று தரிசித்தார்கள்

அங்கு சென்றதும், தமது ஜன்மாவுக்கு மறுபிறப்பில்லை யென்ற உணர்ச்சியும் ஏற்பட்டது. ஜன்மவிரதமும் பூர்த்தியானதாக அகமகிழ்ச்சி உண்டாகியது.

அங்கேயே சில மணி நேரம் தியானத்தில் அமர்ந்து சாந்தி பெற்றார்கள். தமது குருநாதரைத் துதித்து நின்றார்கள். ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பூர்வ ஜென்மாவில் சுகிர்தம் செய்திருக்க வேண்டும்!

உலகில் எல்லோருமே கைலாச யாத்திரையைச் செய்ய முடியாது. பூர்வ ஜென்மத்தில் சுகிர்தம் செய் திருந்தால், அது கிடைக்கும். கைலாச யாத்திரையை மங்களகரமாக முடித்துத் திரும்பியவர்களும் மிகச் சிலரே. கைலாச யாத்திரை செய்ய முடியாதவர்கள் அங்கும் போய் வந்தவர்களைத் தரிசித்தாலே போதும். நமது திருச்சி சுவாமிகள் வெற்றிகரமாகக் கைலாச யாத்திரையை முடித்திருப்பது அபூர்வமும் ஆச்சரிய முமான புண்ணியச் செயலாகும்.

ஸ்ரீ ல ஸ்ரீ திருச்சி சுவாமிகளின் திருப்பணிகளும் அறப்பணிகளும்

பட்டமங்கலம்:—

இஃதோர் செட்டிமார் நாட்டிலுள்ள அழகிய நகரத்தார் கிராமம். இதற்குச் சுமார் மூன்று மைல் தூரத்தில், ஸ்ரீ இராமானுஜருக்கு உபதேசமான திருக் கோஷ்டியூர் என்ற வைஷ்ணவ ஸ்தலமிருக்கிறது. இந்தப் பட்டமங்கையென்னும் பட்டமங்கல க்ஷேத் திரத்தில், ஸ்ரீ மீனாக்ஷி சமேத-சோமசுந்தரேஸ்வரர் பரிவார தேவதைகளுடன் கோயில்கொண்டு விளங்கு கிறார். தட்சிணாமூர்த்திக்கு இங்கு உற்சவ விக்ரஹம்

உண்டென்பது கவனிக்கத் தக்கது. 'மாணிக்கவாசக சுவாமிகளால் "பட்டமங்கையிற் பாங்கா யிருந்தங் கட்டமா சித்தியருளிய வதுவும்" என்று பாடப்பெற்றுள்ளதும் ஈண்டுக் குறிப்பிடத் தகுந்த தாகும்.

இவ்வூர் கிராம தேவதை மிகவும் வரதையாக விளங்குபவள். அழகு சுந்தரி அம்பாள் என்னும் திருப்பெயருடன் மக்களுக்குக் காட்சி அளித்து வருகிருள். இந்த அம்பாள் ஆலயம் பல காரணங்க ளால் பழுதுபட்டிருந்தது. இதனைக் கேள்வியுற்ற நமது திருச்சி சுவாமிகள் மககளின் அழைப்பின் பேரில் இங்கு விஜயம் செய்து, அம்பாளைத் தரிசித்துப் பிரார்த்தனை செய்து கொண்டார். மூல விக்ரஹம் பின்னமாயிருந்ததைக் கவனித்துத் துயரமடைந்து, பொது ஜனங்களின் ஆதரவின் பேரில் கும்பாபிஷேகத் திற்கு ஏற்பாடுகள் செய்யச் செய்தனர். மூல விக்ரஹ மும் மாற்றியமைக்கப்பட்டது. கோபுரங்களும் புதுப் பிக்கப் பெற்றன. பல ஆயிரம் ரூபாய் பொருட்செலவில் ஸ்ரீ அழகு சுந்தரி அம்பாளுக்குக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. எல்லாம் மங்களகரமாக நிறை வேறின.

நகரத்தார்களும், கிராம மக்களும் இக்கைங் கரியத்தில் பக்தி சிரத்தையுடன் பங்கெடுத்துக் கொண்டு அம்பிகை காரியத்தை இனிய முறையில் முடித்து வைத்ததைச் செட்டிமார் நாட்டில் அனைவரும் கொண்டாடி இதற்குத் திருச்சி சுவாமிகளைப் பாராட்டி ஞர்கள். முதன் முதலாகச் செட்டிமார் நாட்டிலுள்ள பட்டமங்கலத்துக்குத் தான் நமது சுவாமிகள் விஜயமா

ஞர்கள். திருச்சியிலிருந்து வந்த சுவாமிகளாலேயே பட்டமங்கலம் கிராம தேவதையின் கும்பாபிஷேகம் விமரிசையான முறையில் நடத்தி வைக்கப்பெற்றதால் மக்கள் அனைவரும் ஒரு முகமாக அன்று முதல் நமது சுவாமிகளைத் "திருச்சி சுவாமிகள்" என்று பெயர் வைத்து அழைக்கலானார்கள். பழநிசுவாமிகள் என்பது "திருச்சி சுவாமிகள்" என்றே அன்புடனும் பெருமையுடனும் அழைக்கப்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது பட்டமங்கல கிராம தேவதையின் கும்பாபிஷேகச் செய்திநாடெங்கும் பரவியது. ஆங்காங்கே மக்கள் தத். தம் கிராமத்திற்கு அன்புடன் சுவாமிகளை அழைத்து உபசரித்தனர்.

கல்லல்:—

இது செட்டிமார் நாட்டில் காரைக்குடி இராமேஸ்வரம் ரயில்வே லைனில் உள்ளது. தனவைசியர்கள் நிறைந்த கிராமம். இக்கிராமத்தில் கிராம தேவதையாகிய ஸ்ரீ நற்கனியம்பாளின் முளைக்கொட்டுத் திருநாள் பல ஆண்டுகளாக, கட்சிப் பிரதிகட்சிகளை முன்னிட்டு, நடைபெறாதிருந்தது. கிராம ஜனங்களின் அழைப்பின் பேரில் நமது ஸ்ரீ திருச்சி ஸ்வாமிகள் அக்கிராமத்திற்கு விஜயமாயிருந்தபோது, கிராமத்தலைவர்களைவரவழைத்துப்பேசி, அனைவரையும்நல்லுபதேசங்கள் மூலம், சமரசப்படுத்தி அம்பாளின் முளைக்கொட்டு விழாவைப் பல ஆயிரம் ரூபாய் செலவில் வெகு சிறப்பாக நடத்தி வைக்கச் செய்தார்கள். நகரத்தாரும் கிராமத் தலைவர்களும் இப்புண்ணிய கைங்கரியத்தைச் செய்து கொடுத்தவர் நமது திருச்சி ஸ்வாமிகளென்றும்

அவரது நாமம் என்றும் நின்று நிலவும் என்றும் வாழ்த்தி, ஸ்வாமிகளைப் பெரிதும் கொண்டாடினார்கள்.

நாட்டரசன் கோட்டை:—

காரைக்குடி இராமேஸ்வரம் ரயில்வே இருப்புப் பாதையில் நாட்டரசன் கோட்டை ஒரு முக்கிய ஸ்டேஷனாக உள்ளது. நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் மிகுந்த கிராமம். இங்குத் தேவாலயங்கள் நிறைந் திருப்பதோடு, கம்பநாட்டாழ்வார்க்கும் இவ்விடத்தில் சமாதி ஒன்று இருக்கிறது. இக்கலியுகத்தில் கண் கண்ட தெய்வமாக விளங்கும் ஸ்ரீகண்ணுடைய நாயகியம்பாள் ஆலயமும் இங்கு பிரசித்திப்பெற்று விளங்குகிறது ஸ்ரீ நேத்திராம்பிகை என்றும் அழைக் கப்பெறுகிற துர்க்கைக்குக் களியாட்டத் திருநாள் வெகு காலமாக நடைபெறாதிருந்தது. இக்கிராமத்திற்கு ஸ்ரீ திருச்சி ஸ்வாமிகள் அழைப்பின் பேரில் விஜயம் செய்தனர். நடைபெறாதிருந்த களியாட்டத் திருநாள், கிராம அபிவிருத்தியை உத்தேசித்து, நடத்தும்படி சொல்ல, கிராமத்தினரும் பல லக்ஷம் ரூபாய்கள் செலவில் பொது ஜனங்களின் ஆதரவைக் கொண்டு இருபத்திரண்டு நாட்கள் தொடர்ந்தாற்போல் திரு விழாவைச் சிறப்பாக நடத்தினார்கள். திருச்சி சுவாமி களையும் பாராட்டினார்கள்.

வெற்றியூர்:—

இந்தக் கிராமம் செட்டிமார் நாட்டில் அரண்மனை சிறு வயல் பக்கத்தில் உள்ளது. இங்கு கிராம தேவதையாகிய ஸ்ரீ அன்னபூரணியம்பாள் கோவில் கொண்டு விளங்குகிறாள். இங்கும் பல சச்சரவு களினால் அம்பாளுக்கு, மது எடுப்புத் திருநாள் வெகு

காலமாக நின்றிருந்தது. செட்டிமார் நாட்டில் பல கிராம தேவதைகளுக்குத் திருச்சி ஸ்வாமிகளின் முயற்சிகளால் திருப்பணி செய்து வைக்கப் பெற்றிருப்பதைக் கேள்வியுற்று கிராமத் தலைவர்களும் ஸ்வாமிகளை அன்புடன் அழைத்தனர். ஸ்வாமிகளும் அனைவரையும் அழைத்து நல்லுபதேசங்கள் செய்தனர். அம்பிகை காரியத்தில் ஒருமனப்பட்டவர்களாய்த் திரண்டு ஈடுபடும்படி சொல்ல, ஜனங்களும் ஒற்றுமையுடன் திருப்பணி வேலைகளில் ஈடுபட்டார்கள். பலாயிரம் ரூபாய்கள் வெகு விரைவில் வசூலிக்கப்பட்டன. ஸ்ரீஅன்னபூர்ணியம்பாளுக்கு மது எடுப்புத் திருநாளும் வெகு விமரிசையாக என்றும் இல்லாத முறையில் அவ்வளவு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஜனங்களும் சந்தோஷத்தை அடைந்து நமது திருச்சி சுவாமிகளின் மகிமைகளைக் கேட்டு மகிழ்ந்தார்கள்.

விரையாச்சிலை:—

இது புதுக்கோட்டை சமஸ்தானத்துக்கு அருகிலுள்ளது. தனவைசியர்கள் நிறைந்த ஊர். சிவாலயங்கள் கொண்ட புண்ணிய ஸ்தலம். கிராம தேவதையான அடைக்கலம் காற்று அம்பாள் கோயில்கொண்டு கிராமத்தைக்காப்பாற்றி வருகிருள். இங்கும் துரதிருஷ்டவசமாகக் கிராம தேவதையின் கோயிலும் பழுதுபட்டு இருந்தது. கிராமத்தலைவர்களின் அழைப்பின் பேரில், நமது ஸ்ரீ திருச்சி ஸ்வாமிகள் இவ்வூருக்கு விஜயம் செய்தனர். கிராமத்தினரையும் அழைத்துப் பேசி, கோபுரங்கட்டுதல் முதல் கும்பாபிஷேகம் உள்பட நடத்தி முடிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. பலாயிரம் ரூபாய்களும் வசூலிக்கப்

பட்டன. கும்பாபிஷேகம் சாஸ்திர ரீதியாக நடத்தி வைக்கப் பெற்றது. கிராமத்திற்கு ஒரு குறையும் இல்லை என்பதாகச் சொல்லி, திருச்சி ஸ்வாமிகளை வாழ்த்தி, அவரது வரலாறுகளைக் கேட்டு மக்கள் அகமகிழ்ந்தார்கள்.

குழிபிறை:—

இந்தக் கிராமம் புதுக் கோட்டையைச் சேர்ந்தது. இங்கு நகரத்தார்கள் வசிக்கின்றனர். பல தேவா லயங்களும் இருக்கின்றன. கிராம தேவதையாக இங்குக் கோயில் கொண்டு விளங்கும் ஸ்ரீ லோக நாயகியம்பாளுக்கு அநுக்ரக சக்தி அதிகம். ஆனால் கோயில் பழுது அடைந்திருந்த நிலையைக் கண்டு மக்கள் வருந்தினர். திருச்சி ஸ்வாமிகளுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. அழைப்பின் பேரில் விஜயம் செய்து கிராமக்கூட்டம் போட்டுப் பேசி தீர்மானித்தப்படி பழுதடைந்த கோயிலைப் புதுப்பித்து விக்கிரகத்திற்குப் பதிலாக சுந்தரமான வசீகரம் பொருந்திய ஒரு விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்து, பலஆயிரம் ரூபாய் செலவில் கும்பாபிஷேகத்தையும் நடத்தி வைத்து மக்களை ஆனந்தக் கடலில் ஆழ்த்தினார்கள். ஜனங்களும் ஸ்வாமிகளின் அவதார, அபூர்வ விசேஷங்களைக் கேட்டுக் கொண்டாடிப் பிரார்த்தித்தார்கள்.

தேவகோட்டை:—

செட்டிமார் நாட்டில் இஃதோர் தனவைசியர் நிறைந்த பெரிய நகரம். பல திருப்பணிகள் செய்து புகழ்பெற்று விளங்கும் சிவநேசச் செல்வர்களின் பல பிரபல குடும்பங்கள் இன்றும் நற்பெயருடன் விளங்குகின்றன. சிவாலயங்களும் நிறைந்த நகரம். நகரச்

சிவன் கோயில் பிராகாரத்திலுள்ள மகாகாளிக்குத் தனியாக புதுக்கோயில் திருப்பணி செய்யப்பெற்றது. லக்ஷக்கணக்கான ரூபாய்களும் கும்பாபிஷேகத்திற்குச் செலவழிக்கப்பட்டன. இந்தப் புனித கைங்கரியத்தில் அக்கறை கொண்டு நமது ஸ்வாமிகளும் அழைப்பின்பேரில், ஆங்கு விஜயம் செய்து அநுக்ரகித்த விஷயம் விசேஷமாகக் கொண்டாடப்பட்டது.

ராங்கியம்:—

இந்தக் கிராமமும் நகரத்தார்கள் நிறைந்துள்ளது. இங்கும் பல சச்சரவுகளினுல் கிராம தேவதையான ஸ்ரீ பொன்னழகி அம்மன் கோயிலும் பழுதுபட்டுக் கவனிக்கப்படாதிருந்தது. கிராமத் தலைவர்களின் அழைப்பின் பேரில், நமது திருச்சி ஸ்வாமிகள் மேற்கண்ட அம்மன் கோயிலுக்கு விஜயம் செய்து, அம்பிகையைத் தரிசித்தனர். உடனே கிராமத்தினரைக் கூட்டிப் பேசி நல்ல முடிவு செய்யப்பட்டது. பல ஆயிரம் ரூபாய் செலவில் அம்பிகை கோயிலைப் புதுப்பித்துப் பிரதிஷ்டை செய்து, கும்பாபிஷேகமும் நடத்தப்பட்டது. திருச்சி ஸ்வாமிகளின் நன்முயற்சிகளை ஜனங்கள் பெரிதும் பாராட்டிக் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

இவ்விதமாக நமது திருச்சி ஸ்வாமிகள் எங்கெங்கு விஜயம் செய்கிருர்களோ, அங்கு அங்கு அவரது விஜயத்தால் க்ஷேமங்களும் சுபிட்சங்களும் உண்டாகின்றன. பல க்ஷேத்திரங்களிலுள்ள கோயில்களை ஜீர்ணோத்தாரணம் செய்ய வேண்டி, பல அழைப்புகளும் வந்து கொண்டிருக்கின்றன. ஸ்வாமிகளால் பல நற்காரியங்களும், எங்குச் சென்றுலும்

எப்போதும் செய்யப்பட்டு வருவதுதான் விசேஷம். ஒவ்வொன்றையும் வரிசைப்படுத்தி எழுதுவது மிகை யாக இருக்கும் என்ற காரணத்தால் இத்துடன் நிறுத் தப்பட்டது.

ஏழைகளுக்குப் பள்ளிக்கூட வசதி:—

நமது திருச்சி சுவாமிகள் செய்துள்ள திருப்பணி களும் அறப்பணிகளும் ஒருபுறமிருக்க, ஏழைகளுக்குக் கல்வியைப் பரவச் செய்யும் விஷயத்திலும் நமது ஸ்வாமிகளும் அதிக அக்கரை எடுத்து வருவது குறிப் பிடத் தக்கது. செட்டிமார் நாட்டிலுள்ள சொக்கநாத புரத்திற்கு அக்கிராமத்தினரின் அழைப்பின் பேரில் நமது ஸ்வாமிகள் விஜயம் செய்தார்கள். அதுசமயம் அவ்வூரில் ஏழைச் சிறுவர் சிறுமிகளுக்கு ஆரம்பப் பள்ளி இல்லாத குறை ஸ்வாமிகளுக்கு எடுத்துச் சொல்லப் பெற்றது. கிராமத்தினரை அழைத்துப் பேசியது மூலம், அவ்வூரில் ஒரு பள்ளிக்கூடமும் ஸ்தாபிக்கப்பட்டு அது இன்றும் செவ்வனே நடை பெற்று வருகிறது.

——::——

கற்பகாம்பிகை

பதிப்பகம்

மெட்ரோபாலிட்டன் பிரிண்டர்ஸ், சென்னை-2.